
# கள்ளக் கோழி



அசோகன்

# கள்ளக் கோழி

— கதைகள் —

★

அசோகன்

★

எரிமலைப் பதிப்பகம்

துறையூர், திருச்சி Dt.

எரிமலை வெளியீடு
முதல் பதிப்பு ஜுன் 1949

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 480
நன்கொடை எண்: 480



'முத்தமிழ்க் கலா வித்துவரத்தினம்'
அமரர் அவ்வை சண்முகம் அவர்கள் நினைவாக
மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்துக்கு
அன்புடன் அளிக்கப்பட்டது.

27-1-1979

ஸ்ரீ நடராஜா பிரஸ் துறையூர்.
பிரதிகள் 1000.

# இந்தக் கதைகள்.

★

தமிழில் சிறுகதைகள் ஏராளமாக வளர்ந்துள்ளன. என்றாலும், புதுமைக்கு இன்னும் எவ்வளவோ இடமிருக்கிறது. தமிழ் கதைக் காடாக மாறிவிட்டது என்கிறார்களே தவிர, தமிழில் நல்ல கதைகள் போதுமானபடி வரவில்லை என உணர்ந்து புதுமுயற்சிகள் செய்யத் துணிகிறவர்களை அதிகம் காணோம். தமிழில் இப்பொழுது வருகிற கதைகளில் முக்காலே மூணுவீசம் சுவைக்குதவாத குப்பைக் கதைகளே யாகும். முன்வந்த கதைகளைப் புதுமெருகிட்டு சொந்தமெனப் பம்மாத்துப் பண்ணித்திரிகிற மாரீசர்களும், தழுவலர்களும், களவாணகளும் தான் அதிகரித்து வருகிறார்கள்.

இன்றையப் பத்திரிகைகள் அவற்றுக்கு இடமளிக்கின்றன. போற்றிப் புகழவும் தயாராக இருக்கின்றன. ஆனால், புது முயற்சிகளுக்கு வரவேற்பு அளிக்கும் தாராள மனோபாவம் இன்றையப் பத்திரிகாசிரியர்களிடம் இல்லை. இப்பொழுதும் பத்திரிகை அண்ணாத்தைகள் விரும்புவது ரயிலடியில், குழாயடியில், மோட்டாரில், மாமனார் வீட்டில், குளக்கரையில் எல்லாம் நடைபெறுவதாக அளக்கப்படுகிற காதல் விவகாரங்களைத் தான். வாழ்வின் மர்மங்களை ஆராய விரும்பவில்லை. சமூகத்தின் உண்மைத் தன்மையை அம்பலமாக்கத் துணிவதில்லை. மனித உள்ளங்களின் உணர்ச்சிகள், எண்ணங்களின் விளையாடல்களை, விபரீத விசித்திரங்களை, கோணல்களை, கோளாறுகளை—மனிதப் பண்புகளின் விதவித நிலைகளையே—பல்வேறு பார்வைகள் மூலம் கண்டு உள்ளது உள்ளபடி கூற முனைவதில்லை. அவ்விதம் எழுதுகிற ஒரு சில எழுத்தாளர்களுக்கு இடம் கொடுக்கத் தயங்குவதுடன், இருட்டடிப்பும் எதிர்ப்பிரசாரமும் செய்யவே துணிகிறார்கள். இலக்கிய சனாதனிகள்.

பத்திரிகை முத்தண்ணாக்கள் சிலரின் வெறுப்புக்கும், ஆனால் எண்ணற்ற வாசகர்களின் விருப்புக்கும் பாராட்டுதல்களுக்கும், உள்ளானவை இந்தக் கதைகள். **கள்ளக் கோழி** முதலிய கதைகளைப் படித்துப் பார்க்கும் நீங்களே உணர்வீர்கள், இந்தக் கதைகள் இன்

றைய இலக்கிய வங்கிழடுகள் வகுத்த சம்பிரதாயப் பாதையிலிருந்து எவ்விதம் விலகியுள்ளன என்று. அதே வேளையில் நீங்களே உணர முடியும், இந்தக் கதைகள் சில தீவிரவாதிகள் துணிச்சல் என்று சொல்லிக்கொண்டு எழுதுகிற நிர்வாணத்தனமான உண்மை ஆராய்ச்சி வகைகளைச் சேர்ந்தனவும் அல்ல என்பதை. பழமைப் பண்பின் நிறைவிலே வேரூன்றி புதுமை வெளியிலே கொடி வீசி இனிய மலர்களைப் பூத்துக் குலுக்க முயல்கிறது. திரு. அசோகன் அவர்களின் திறமை என்பதற்கு இந்தக் கதைகளே சாட்சி.

கலையின் பெயரால் காடித்தனம் செய்து வாழ்கிற இன்றையப் பட உலகினரின் பிம்பமான ராவண்ணுவின் அனுபவமும், உணர்ச்சியால் உந்தப்பட்ட குழல்வாய் மொழியின் மரண மர்மத்தை தம்பி வேணு விளக்குகிற விதமும் அசோகனின் கதை சொல்லும் திறமைக்கு நல்ல எடுத்துக்காட்டுகள். குழல்வாய் மொழியின் தவறுதலுக்கு, மரணத்துக்கு, வேணுவின் மறைவுக்குக் காரணங்களை எண்ணுகிற நாராம்புநாதனின் 'ஏன்'கள் எழுப்புகிற சிந்தனை மனிதர்களின் இதயத்திலே தைக்கக் கூடிய அறிவின் கேள்விகள் இல்லையா! நல்ல கதை. **'கிளர்ச்சி'** நாட்டிலே மக்களிடையே வளர்ந்து வருகிற உணர்ச்சிப் பிசகுகளைச் சித்தரிக்கும் அழகானகதை.

இந்தக் கதைகளைப் படிக்கும் போது, வாசகர்களை மயக்கச் சிலர் கையாளும் வார்த்தை ஜிலு ஜிலுப்புகள், அநாவசியமான சொல் ஜாலங்கள், மிரட்டுகிற சொல்வித்தை முதலியவைகளை அசோகன் அழகுநடை எனக் கொள்ளவில்லை என்பதை அறிவீர்கள். ஆனால், இனிய தெளிந்த பொருநையின் நீரோட்டம் போன்ற குளுமை **'அசோகன்'** (ரா. சு. கோமதிநாயகம்) அவர்களின் தமிழ் நடையிலே இலங்குவதை உணரமுடியும். இவை நல்ல கதைகள் என நீங்கள் மகிழ்வீர்கள் என்பதில் எனக்கு சந்தேகம் கிடையாது. இவை போன்ற புதிய முயற்சிகள் தமிழில் அதிகம் வரவேண்டும்.

**சாந்தி நிலையம்**
2—6—49

**வல்லிக்கண்ணன்**

# கள்ளக் கோழி!

★

டாக்ஸி வேகமாகப் போய்க்கொண்டிருந்தது.

இயங்கும் இயந்திரச் சுழற்சியோடு போட்டிபோடும் தன்மையில் வேகமாக வேலை செய்துகொண்டிருந்தது 'ராவன்னு'வின் சிந்தனை.

'ராவன்னு' படவுலக வட்டாரங்களில் பிரமாதமாகப் பெயர் அடிபடும் ஒரு பிரசித்தப் புள்ளி. அவர் அந்த உலகிற்கு வந்து சேர்ந்ததே ஒரு பெரிய கதை.

அவரது முழுப்பெயர் ராக்கப்பச்செட்டியார். பரம்பரையாகப் பண லேவாதேவியைத் தொழிலாகக்கொண்ட ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர். வழி வழியாக வட்டிக்குக் கொடுத்துச் சேர்த்த செல்வம். வட்டிச்சிட்டை, கணக்கு நோட்டு பேரேடுகள், பிராமிசரி நோட்டுக் கத்தைகள், ஊரிலே பெரிய மனுஷர் என்ற கௌரவம், பெரிய கோவில் தர்மகர்த்தாப் பொறுப்பு ஆகிய சகல சம்பத்துக்களையும் தமது புத்திரபாக்கியத்திற்குப் 'பட்டா இறக்கி' விட்டு, பெரிய செட்டியார் 'மண்டையைப் போடு' மட்டும் அவர் வாழ்ந்த தினுசே அலாதியானது.

அப்பொழுதெல்லாம் இப்பொழுது மாதிரிச் சதா ஸில்க் ஜிப்பா, கழுத்திலே மின்வெட்டும் தங்கச் சங்கிலி, டால் வீசும் 'கோல்ட் ரிஸ்ட் வாட்ச்,' அதற்கு வைரம் வைத்திழைத்த செயின், 'த்ரீ காஸில் சிகரெட் டின், 'மாட்ச் பாக்ஸ்' சகிதம் ராக்கப்பனைப் பார்க்க முடியாது. அப்பாவிற்கு நல்ல பிள்ளையாகக் காட்டிக்கொள்ள சாதாரண,

நாட்டுப் புறத்துப் பெரிய வீட்டுப் பிள்ளையாண்டான்களைப் போல உடையலங்காரம், வீட்டு விவகாரங்களைக் கவனிப் பது, சாயங்காலம் கோவில் பக்கம் தலையைக்காட்டுவது எனப் பம்மாத்துப் பண்ணித் திரிந்தார். சில நாட்களில் இரவு எட்டரை மணிக்கு மேல் நண்பர்கள் சிலருடன் நாக ரிக மைனர் வேஷத்தில், சைக்களில் டவுனுக்குப் போய் 'மாடத் தெரு மோகினி'களுடன் 'ஜல்ஸா' செய்து திரும்பு வார். அத்தகைய 'ராக்காடு வெட்டும்' லீலைகள் மைந்த னைப் பற்றித் தந்தையார் அறிந்த விஸ்ர எல்லைகளுக்கு அப் பேர்பட்ட விநோதங்கள்.

தகப்பனார் மறைந்த பிறகு தட்டிச்சொல்ல ஆள் கிடையாது. எனவே பயப்படவேண்டிய அவசியம் இல்லை. செயல்கள் தாராளமாக, தங்கு தடை இன்றி, பகிரங்கமாக நடைபெறத் தொடங்கின. பெரிய செட்டி யாருக்கு 'தொடுப்பு' என்ற காரணத்திற்காக அதுவரை அவர் வழிவிலகி நடந்து கொண்டிருந்த கோவில் தாசி அலங்காரத்தாச்சி மகள் அம்புஜம் ஐயாவின் ஆசைநாயகி யானாள். அற்புதமாகப் பாடும் ஆற்றலுள்ளவளாக அவர் கருதிய அந்த 'ஸ்வீட் ஹார்ட்'டை வெள்ளித் திரையிலே ஒளிவீசச் செய்து, திக்கெல்லாம் புகழ் பரவ வழி ஏற்படுத் தினால் என்ன என்ற சபலம் எழுந்தது அவருக்கு. அந்த ஆசை அவர் மூலமே அவளையும் பற்றி ஆகாமல் தீராது என்ற எல்லையை அடைந்தது. படத் தொழில் அவருக் குப் புதிது. தனியாக இறங்கி ஆழம் பார்க்கப் போது மான பணமோ, தெம்போ இல்லை. என்னடா செய்வது என யோசித்தார்.

மழை காலத்தில் சாம்பல் கிடங்குகளில் காளான்கள் முளைப்பதுபோல், படவுலகில் புதிது புதிதாக புரொடியூசர்

கள் தலைதூக்கிக் கொண்டிருந்த காலம் அது. கையிலே போதிய பணம் இல்லை என்றாலும், கருப்பு மார்க்கெட்டில் சம்பாதித்த ஒரு சில ஆயிரங்களைக்கொண்டு விநியோகஸ்தர்கள், பிரதேச உரிமை வாங்குபவர்களையும், கடன் கொடுப்பவர்களையும் நம்பிப் படவுலகில் பல 'முதலாளி'கள் தோன்றிக் கொண்டிருந்தார்கள். ஒருவர் சொன்னதைப் போல 'பொம்பிளை ஷோக்'கும், 'கியா'லும் அதிக லாபம் அடைய சினிமா ஒரு தொழில் என்பதுமே காரணங்கள். எனவே, பணமுள்ளவர்கள் கவனத்தை அந்தத் திசைக்கு இழுக்கத்தக்க தரகச் சுறா மீன்கள் பல வாலடித்துத் திரிந்தன. சில சந்தர்ப்பங்களில் நடிகைகள் சிலரே 'துருப்புச் சீட்டுகளாக'ப் பயன் படுத்தப்பட்டனர்.

அத்தகைய 'சுறா' ஒன்றின் பசப்பு வார்த்தைகளுக்கு இரையாகிப் பட வுலகிற்கு இழுத்துவரப்பட்டார் ராக்கப்பன். தமது லட்சியமான அம்புஜத்தைச் சினிமாவில் சேர்ப்பதையும் சித்தியாக்கிக் கொள்ளலாம் என்பது அவர் நோக்கம்.

நோக்கம் நிறைவேறியது. வருஷம் ஒன்றிற்கு ஆறு சத விகிதத்தில் 'புரோநோட்டு'களின் பேரில் கடன் கொடுக்கும் பழக்கம் தொலைந்தது. நூற்றிற்கு மாதத்திற்குப் பதினைந்து ரூபாய்க்கு அதிகமாகவே வட்டி கூட்டி வட்டிக்கும் முதலுக்குமாகச் சேர்த்து, 'உண்டி' எழுதி வாங்கிக்கொண்டு, அறுபது நாள், தொண்ணூறு நாள் என்று 'அண்டிமாண்'டின் பேரில் தவணைக்குப் பணம் கொடுக்கத் தலைப்பட்டார். அம்புஜத்திற்கும் 'சினிமா சான்ஸ்' கிடைத்தது.

சில வருஷங்களிலே ராக்கப்பனது முதல் பல மடங்கு பெருகிற்று. 'ராவன்னா' என்ற பெயரும் பல இடங்க

ளில் அடிபடத் தொடங்கியது. விரைவிலேயே அம்புஜமும் நட்சத்திரப் பதவிக்கு உயர்ந்தாள். ஆனால், புகழ்ச்சிக்கு உயர்ந்ததும், இறக்கை முளைத்தவுடன் பறந்தோடிப் போகும் பட்சியைப் போல ராக்கப்பனை விட்டு அவள் பறந்து விட்டாள். குவியும் பணம், புதுப்புது நட்சத்திரங்கள், நடிக நண்பர்கள், பட முதலாளிகளின் உறவு, கடன் வாங்கச் சிக்க வைக்கும் வலையாகச் சிலர் கொணர்ந்து தள்ளும் 'சரக்கு'களின் சகவாசம் ஆகிய பல உல்லாசங்களுக்கிடையே 'காடை கைவிட்டுப்போனதை'ப் பற்றிக் கவலைப்பட வில்லை ராவன்னா.

'ஜயம், ஜய' மென்றடித்தது இன்னும் கொஞ்சகாலம். பிறகு 'ரோதை' சிக்க ஆரம்பித்தது. கடன் வாங்கியவர்கள் சிலர் பணத்தைத் திருப்பிக் கொடுக்க முடியவில்லை. அவர்களது படத்தை வாங்குவார் கிடையாது. ஆகவே, டப்பாக்களில் உறங்கிய அவற்றை அவரே எடுத்து, விநியோகித்து, ஓட்டி பணம் பார்க்க நேர்ந்தது. அவரிடம் வாங்கிய காசை குஷாலாகத் 'தீவாளி' பண்ணி விட்டுப் படத்தை முடிக்க வழி இல்லாமல் திணறினார்கள் சிலர். அந்தப் படங்களுக்கு அதிக முதல்போட்டு அவரே முடிக்க வேண்டி வந்தது.

இப்படிச் சன்னஞ் சன்னமாகப் படத்தொழிலின் பல துறைகளிலும் நுழைந்து அனுபவப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அந்த அனுபவங்கள், 'இப்படிக் கடன் எழுவிற்கு மாரடிப்பதைவிடச் சொந்தமாகவே ஒரு படம் எடுத்துத் தொலைத்தால் என்ன?' என்று எண்ணத் தூண்டின.

டாக்ஸி வேகமாகப் போய்க்கொண்டிருந்தது.

முன்னேறும் வேகத்தில், பின் தொடர, டாக்ஸி பின்னால் தள்ளிச்சென்ற டிராம்களின் 'நுண,நுண'ப்பு-பஸ்

களின் 'ஹார்ன் அலறல்கள்-வயிற்றுப்பாடு பெரும்பாடாக உந்த, அதனுல் அடிசுட மண்டை வெடிபடக்காயும் நூற்றிப்பத்து டிகிரி வெயிலேயும் கானல் பறக்கும் தார் ரோட்டையும் லட்சியம் செய்யாது, இதயம் செத்த மாமிச பர்வதங்களை இழுத்து ஒடும் ரிக்ஷாவாலாக்களின், 'ஓரம்! ஏய், ஓரம் போ!' என்ற குரல்கள் எதுவும் அவர் யோசனையைச் சிதற அடிக்கவில்லை.

அவரது நினைவெல்லாம் ராதாமணியைப்பற்றிய விவரங்களிலேயே லயித்திருந்தது.

அவளைப் பற்றி ராகவன் சொன்ன விஷயங்களெல்லாம் நிசமாக இருக்குமா? இல்லை, பயல் சும்மா தான் அளந்திருப்பானு? உண்மையாக இருக்கும் என்று நம்பக்கூட முடியவில்லையே! அவள் அப்படி ரொம்ப ரொக்கம் என்ருல் அவளால் எப்படி இவ்வளவுகாலம் கொண்டி செலுத்த முடிந்தது? 'நீராமின்னு'ளில் அவள் தோன்றிய லட்சணம்! அதை நினைத்தால்..........

ராதாமணி நடித்த முதல் படமான 'நீராமின்னு'ளில் அவள் தோன்றிய கோலம் அவர் மனத்திரையிலே மின்னியது. முக்காலே மூணுவீசம் நிர்வாணமாக, பெண்மை எழில் பெரும் பகுதி வெளிச்சம் போட அவள் அந்தப் படத்தில் நடிப்பு என்ற பெயரில் ஓடியாடித் திரிந்தாள்.

அதைப்பற்றி ராகவனிடம் அவர் விவாதித்தபொழுது அவர் சொன்னுர் "அதை நீங்கள் தப்பிதமாக எடுத்துக் கொள்ளக்கூடாது. இப்பவும்கூட அவள் கலைக்காக எதையும் செய்யத் தயார்."

எதையும் செய்யத் தயாராம்! பின்னே என்ன? இதையும் செய்ய ரெடியா இருப்பாள் என்றுதானே அர்த்தம்?

'இதை' என்பது எதை என நினைக்க அவருக்கே சிரிப்புத் தாளவில்லை. தம்மையும் மீறி வாய்விட்டுச் சிறிது உரக்கவே சிரித்து விட்டார்.

திடீர்ச் சிரிப்பொலி எழக்கேட்ட டிரைவர் தலையைத் திருப்பி அவர்மீது கணநேரம் கண்ணோட்டம் செலுத்தித் திரும்பினன். 'ராவன்னு'விற்கு அசடு தட்டியது. பைத்தியமோ என எண்ணுவான் அவன் என்று நினைத்தார். நிலைமையை ஒருவாறு சமாளித்து "ராதாமணியைப் பற்றி இப்பவே என் மண்டையை உடைத்துக் கொள்ள வேண்டும்? விடிஞ்சாத் தெரியுது வெளிச்சம். இன்னும் கொஞ்ச நேரத்திலே தானகத் தெரிந்துவிட்டுப் போகிறது!" எனச் சமாதானம் செய்துகொண்டு தெருக்காட்சிகளைக் கவனிக்கத் தொடங்கினர்.

வண்டி வேகமாகப் போய்க்கொண்டிருந்தது.

சொந்தத் தயாரிப்பு பற்றிய சிந்தனை பிறந்ததுமே யாரை நடிக்க ஒப்பந்தம் செய்யலாம் என்ற பிரச்னை எழுந்தது. ஆலோசித்த அவருக்கு ராதாமணியின் ஞாபகம் வந்தது.

ராவன்னுவிற்கு ராதாமணி மீது பல நாட்களாகவே கண். "நீராமின்னு'வைப் பார்த்த நாள் தொட்டுப் படர்ந்த நப்பாசை. படவுலகில் புகுந்த பிறகு அவளைப்பற்றிக் கேள்விப்பட்ட கதைகள் ஆசைத்தீயை விசிறி விடும் மேல் காற்றுச் சுழல்களாயின. "பிரமாத நட்சத்திரங்கள் எனப் புகழப்படுபவர்களை யெல்லாமே பார்த்தாச்சு. இவ மட்டும் என்னவாம்! இவளும் என்னிடம் சிக்க ஒரு சந்தர்ப்பம் வராமலா போகும்!' என அடிக்கடி சொல்லி வந்தார்.

ராகவன் ராதாமணி நடித்த படங்கள் சிலவற்றிற்கு 'காஸ்ட்யூம் டைரக்டர்'ராக இருந்தவர். அவரோடு ராவன்னு

அடிக்கடி ராதாமணியைப் பற்றிப் பேசியபொழுது அவர் ராதாமணி தனிரகமானவள், அவள் போக்கே ஒரு மாதிரி யானது, அதனுல் புரொடியூசர்களுக் கெல்லாம் அவள் மீது வெறுப்பு என்று சொல்லிவந்தார். அப்படிப்பட்டவர் சில தினங்களுக்கு முன்பு வந்து ராதாமணிக்கு இந்த முதலாளிகள் செயல்களே பிடிக்க வில்லையாம், இனி சொந்தத்திலேயே படம் தயாரிக்கப் போகிருளாம். அதற்காக நல்லவராகப் பணம் போடக்கூடியவராக ஒரு பங்குதாரருக்காகப் பார்த்துக்கொண்டிருக்கிருள் என்ற செய்தியை அறிவித்தார்.

அதைக் கேட்டதும், தாம் எதிர்பார்த்திருந்த சந்தர்ப்பம் வந்துவிட்டது எனச் சந்தோஷமடைந்தார் ராவன்ஞ. ராதாமணி எப்படிப்பட்டவள் என்பதைப் பார்த்துவிடலாம். அவளைத் தமது படத்திற்கு ஒப்பந்தம் செய்ய விரும்புகிறவரைப் போல போய், அவள் மனம் போலவே பேச்சுக்கொடுத்து, நேரம் போக்கி, கடைசியில் அவள் படப்பிடிப்பிற்குப் பணம் உதவுவதாகச் சொல்லி நோட்டம் பார்த்து விடலாம் என எண்ணி மகிழ்ந்து போனுர்.

அதற்காகவே அன்று தமது சொந்தக்காரை விட்டு விட்டு, 'டாக்ஸி' அமர்த்திக்கொண்டு, மத்தியானம் இரண்டு மணிக்கு நகரின் மறுகோடியில் இருந்த நட்சத்திரத்தின் வீட்டிற்குப் புறப்பட்டார் அவர்.

டாக்ஸி வேகமாகப் போய்க்கொண்டிருந்தது.

டிராம்களின் 'நுண, நுண'ப்பு, பஸ்களின் அலறல், பாட்டை சாரிகளின் ஓட்டசாட்டம், சலசலப்பு, சகலத்தையும் சற்று நேரம் கவனித்த ராவன்ஞ சடிதியிலேயே சலித்துப்போனுர். மீண்டும் ராதாமணியைப் பற்றி, அவளோடு பேசவேண்டிய விதம் பற்றியெல்லாம் திட்டம் போட ஆரம்பித்தார்.

திட்டத்திலே திளைத்த சிந்தனை ராதாமணியின் பங்களா வரும்வரை தடம் பிறழவில்லை.

பங்களா வாசலில் வ ந் து கார் நின்றது. 'கேட்' அருகே புருக்கூடு மாதிரி இருந்த கூண்டிலிருந்த காவற் காரன் வந்திருப்பது யார் என்றறிய எட்டிப் பார்த்தான்.

"அம்மா இருக்காங்களா?" என விசாரித்தார் 'ஐயா'

"இருக்காங்க. இப்பதான் தூங்கப் போனுங்க," என்ருன் காவற்காரன்.

முதலாளி ஐயா காரை விட்டிறங்கினர். பார்வை பங்களாவை நோக்கிப் பாய்ந்தது. சாளரத்தில் சந்திரோ தயம்! வந்திருப்பது யார் என்றறிய ஹால் ஜன்னல் வழி யாக 'நட்சத்திரம்' எட்டிப் பார்த்தது.

"அம்மா இன்னும் தூங்கப்போகலை," என் ருர் ராவன்னு.

காவற்காரன் மௌனமாக அவர் நோக்கிய திசையில் பார்வை செலுத்தினன். அம்மாவைக் கண்டதும் தன் னைப் பொய்யனுக்கி விட்டாளே எனப் புழுங்கியது மனம். பதில் பேசாமல் நின்ருன்.

அவசர அவசரமாகப் 'பாக்கெட்'டிலிருந்து 'பர்ஸை' எடுத்து 'மீட்டர் சார்ஜ்'படி வாடகையைக் கொடுத்து விட்டு, இனும் காசிற்காகக் கையைச் சொரிந்த டிரைவரை கூடக் கவனிக்காமல் பங்களாவிற்குள் நு ழை ந் தா ர் ராவன்னு.

தோட்டத்தைக் கடந்து அவர் வராந்தாப் ப டி க ளை நெருங்கியதும், ஜன்னலைவிட்டு ஹால் வாசலுக்கு வந்தாள் ராதாமணி.

கருப்புக் கரையுடன் கூடிய வெள்ளைப் புடவையும், மல் ரவிக்கையும் அணிந்திருந்தாள் அவள். நன்கு படியும்

படி வாரிவிடப்படாத கூந்தலின் சுருள்கள் சில நெற்றி யிலே விழுந்து தறுதலைத்தனமாக விளையாடிக் கொண்டி ருந்தன. 'மேக்-அப்' இல்லாத அந்தச் சாதாரண நிலையி லும் அவள் அவர் கண்களுச்கு அழகியாகவே திகழ்ந்தாள். புன்னகை நெளியும் வதனத்துடன், இருகரம் கூப்பி, 'நமஸ் காரம்', என இன்மொழி சிதறி அவள் அவரை வரவேற் ருள்.

க்ஷணநேரம் தாம் எங்கிருக்கிறேம் என்பதையே மறந்து விட்டார் ராவன்னு. பின்பு, சொக்கு நிலையிலி ருந்து சமாளித்துக்கொண்டு, 'என்னைத் தெரியுதுங்களா?' என்ருர்.

"தெரியாமல் என்ன? ஸ்டுடியோக்களிலே ரெண்டு மூணு தடவை பார்த்திருக்கிறேன். பல முறை உங்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன்", என்ருள் ராதாமணி.

"நானும் உங்களைப் பார்த்திருக்கிறேன். ஆனல் அறி முகம் செய்துகொள்ள இப்பொழுதுதான் சந்தர்ப்பம் வாய்த்தது," என்ருர் படியேறி வராந்தாவை அடைந்த ராவன்னு.

"முன்னதாகவே வந்திருக்கலாமே," என்ற ராதா "உட்காருங்க நிக்கிறீங்களே!" என்ருள். ஒரு ஓரத்தில் கிடந்த நாற்காலியைச் சுட்டிக்காட்டி உபசரித்தாள்.

ராவன்னுவிற்கு உச்சி குளிர்ந்துவிட்டது. ரொம்ப நல்லமாதிரியாகத் தான் தென்படுகிருள்; இதர சாதாரண நடிகைளைப் போலவே தான் பழகுகிருள்; விசித்திர குணம் படைத்தவள் என்ப தெல்லாம் வெறும் 'டுப்'; சுத்தக்கட் டுக்கதை போலிருக்கிறது என எண்ணினர்.

அவர் நாற்காலியில் அமர்ந்ததும் அவளும் ஒரு நாற் காலியில் அமர்ந்தாள். வீட்டு உள்ளே இருந்து நாற்பது,

நாற்பத்தைந்து வயதுள்ள ஒரு அம்மாள் வந்தாள். அவள் தன் தாய் என அறிமுகம் செய்த நடிகை ராவன்னாவையும் அவளுக்கு அறிமுகப் படுத்தினாள். பின்பு எழுந்து, உள்ளே போய் வந்து அமர்ந்தாள்.

சிறிது நேரத்தில் காபி, பலகாரம் வந்தது. வேலைக்காரன் ஒருவன் கொண்டுவந்து வைத்துப்போனான். "இதெல்லாம் எதுக்குங்க?" என்ற சம்பிரதாய மறுப்பிற்கும், "இல்லை. சும்மா சாப்பிடுங்க," என்ற உபசரணைக்குமிடையே கொஞ்ச நேரம் கழிந்தது. ராவன்னா ராதாமணியின் நடிப்புத்திறமையைக் குறித்துப் பேச ஆரம்பித்தார்.

"காபி சாப்பிட்டுவிட்டுப் பேசுங்கள்," என்றாள் அம்மாள்.

ஒருவகையாகச் சிற்றுண்டி முடிந்தது. பின்பு ராதாமணி நடித்த படங்கள், அவை அடைந்த வெற்றி, அவற்றிலே அவள் நடித்த சிறப்பு முதலிய புரளோலங்களையெல்லாம் ஒரு பாட்டம் புகழ்பாடித் தீர்த்தார் ராவன்னா. அவளும் சுவாரஸ்யமாகப் பேச்சில் ஈடுபட்டாள். அவள் நடித்த பொழுது நடைபெற்ற சம்பவங்கள், படமுதலாளிகள், டைரக்டர்கள் குணதிசயங்கள், படவுலகின் தன்மை குறித்தெல்லாம் அவளது விமர்சனங்கள் வெளிவந்தன. ஒளிவு மறைவின்றி வெளுத்து வாங்கினாள்.

தன்னிடம் அவள் இதையெல்லாம் சொல்லுவானேன் எனத் தயங்கினார் ராவன்னா. தன்னையும் அத்தகைய ஒருவன் என்ற லிஸ்டில் சேர்த்து, தனக்கு உறைக்கவேண்டும் என்பதற்காக அவ்விதம் பேசுகிறாளா என்ற சந்தேகம். பேர்வழி கொஞ்சம் விசித்திரம்தான் போலும் என எண்ணத்தொடங்கினார். என்ன இருந்தாலும், சுவையாகவும், சுபாவமாகவும் அவள் விஷயங்களை விஸ்தரித்துச் சொன்ன

பொழுது அவளையே பார்த்துக் கொண்டிருந்தது இன்ப மாக இருந்தது.

நேரம் ஓடியது. டிராம்களும், பஸ்களும் போய்க் கொண்டிருந்தன வெளியே. ரஸ்தாவில் ஜனங்கள் போவதும் வருவதுமாக இருந்தனர். இடை யிடையே அவளைத் தெரிந்தவன் எவனுவது கூடப் போகிறவனுக்கு அவள் வீட்டைக்காட்டி, வராந்தாவில் அமர்ந்திருப்பது ஸ்டார் ராதாமணி எனச் சொல்லிப்போவான். பேச்சில் ஈடு பட்டிருந்த அவர்கள் அதை ஒன்றையும் கவனிக்கவில்லை.

கடிகாரம் நாலுமணி அடித்து ஓய்ந்தது.

"மணி நாலாகிவிட்டதா? அம்மாவுடன் பேசிக் கொண்டிருங்கள். வந்துவிடுகிறேன்." என்று சொல்லிப் போனுள் ராதாமணி.

நேரக்கொலை செய்து 'லட்சிய சித்தி'க்காக முயலும் எண்ணத்தோடு வந்திருந்த ராவன்னு அதுவும் நல்லதுக்குத் தான் எனக் கருதினர். ஆனல் மகள் வீட்டிற்குள்போனதும், கேட்ட பிளேட்டையே மறுபடியும் போடுவதைப் போல மகள் சொன்னதையே திரும்பவும் அம்மாவும் சொல்ல ஆரம்பித்தது கழுத்தறுப்பாகத் தோன்றியது. பாவம், கேட்டுச் சகிக்கவேண்டி யிருந்தது.

"சவம் என்ன தொழில் செத்த தொழில்," என அலுத்துக் கொண்டாள் அவள்.

"தொழில் நல்லதுதான். அதில் ஈடுபட்டிருப்பவர்கள்..........." என இழுத்தார் ராவன்னு.

நல்ல வேலையாக ராதாமணி திரும்பிவந்து சேர்ந்தாள். குளித்து, புடவைமாற்றி, அலங்காரம் செய்து, ஜ்வலிப்பு மங்கையாகத் திகழ்ந்தாள் அவள்.

அவளைத் தொடர்ந்து வேலைக்காரன் பழவகைகளும் ஓவலும் கொணர்ந்தான்.

சாப்பிட்டானதும் "சினிமா எதுக்காவது போவோயா?" என்றார் அவர்.

"அதெல்லாம் எதுக்கு? இங்கேயே இருந்து பேசிக் கொண்டிருக்கலாம்," என்றாள் அவள்.

மின்னல் தாக்குதல் மோசம், முற்றுகை மூலம் சாவதானமாகக் கோட்டையைக் கைப்பற்ற வேண்டுமெனத் திட்டமிட்டிருந்த ராவன்னாவிற்கு எதிரி சுலபமாகவே சரணாகதி யடைவதாகத் தோன்றியது. ராதாமணியின் பேச்சில் ஏதோ விசேஷம் இருக்கிறது என்று எண்ணினார்.

குஷியாக வீட்டில் தங்கச் சம்மதித்து, தமது அனுபவங்கள், தாம் பார்த்த, பழகிய, பட முதலாளிகளின் தன்மைகள், தவறுகள், தமது திட்டங்கள் குறித்தெல்லாம் விரிவாக, பிரமாதமாகப் பேசினார்.

பேச்சு வாக்கில் பொழுதையே கவனிக்கவில்லை. மாலைப்போது கவிந்து, இருள் சூழ்ந்து, தெரு விளக்குகளெல்லாம் ஏற்றப்பட்டுவிட்டன.

"சாப்பிட்டுவிட்டு வந்து பேசலாம்," என ராதாவின் தாயார் சொன்னதும் தான், "அட இவ்வளவு நேரமாகி விட்டதா? அப்போ நான் போய் வருகிறேன். நாளை வந்து நம்ம பட விஷயமாகப் பேசிக்கொள்கிறேன்," என்றார் ராவன்னா.

"இங்கேயே சாப்பிட்டுவிட்டுப் பேசி முடிக்கலாம்," என்றாள் ராதா.

சாப்பாடு முடிந்து மறுபடியும் வராந்தாவில் வந்து அமர்ந்தார்கள். ஜன சந்தடி வரவரக் குறைந்து, டிராம்

பஸ்கள் போக்குவரத்து நிற்கும் வரை பேசிக்கொண்டிருந்தார்கள். தமது படத்தில் அவள் நடிக்க வேண்டியது, அவர் அவள் தயாரிக்க விருக்கும் படத்திற்குப் பொருள் உதவுவது, அவள் இஷ்டம் போலவே நடிகர்கள், டைரக்டர் எல்லாம் நியமிப்பது எனப் பேசி முடிவாயிற்று.

இடையில் தாய் தனக்குத் தூக்கம் வருகிறது என்று சொல்லி அவளது அறைக்குப் போய்விட்டாள்.

மணி பத்தாயிற்று. "பெரிய நட்சத்திரம் நீங்கள் உங்கள் வீட்டில் போன் இல்லாமல் இருக்கிறீர்கள்!" என்ருர் ராவன்ஞ.

"எதுக்கு? யாராவது அடிக்கடி கூப்பிட்டு எதையாவது சொல்லி உயிரை வாங்கவா?" என்று சொல்லிச் சிரித்தாள் அவள்.

"இல்லை. போன் இருந்தால் டாக்ஸி கம்பெனிக்குப் போன் பண்ணி ஒரு டாக்ஸி வரவழைத்து நான் போகலாம் பாருங்கள். முதலாளிகள் கார் உங்களுக்கு உபயோகப் படுவதால் நீங்களோ கார் வைத்துக்கொள்வதில்லை. என் கார் நான் புறப்படும்போது வெளியே போயிருந்தது. நான் இங்கே வருவதாகச் சொல்லி வரவில்லை. சொல்லியிருந்தால் கொண்டு வந்திருப்பான்."

"என் இவ்வலவு கவலை? இங்கேயே படுத்திருந்துவிட்டுக் காலையில் போனுல் போச்சு."

அவர் எதிர்பார்த்ததும் அதுதானே! தமது சந்தோஷத்தை மறைக்க முயன்றும் அவரால் முடியவில்லை. மனமகிழ்வின் சாயை அவர் முகத்தில் படிந்தது.

ராதாமணி அவரைக் கவனிக்க வில்லை. வேலைக்காரனை அழைத்து அவருக்கு வராந்தாவில் படுக்கை போட்டுவிட்டு

ஹாலுள் தனது படுக்கையையும் போட்டுவிட்டு அவன் படுக்கப் போகலாம் எனக் கட்டளையிட்டாள்.

தமக்கு வெளியே படுக்கை போடச் சொன்னதைக் கேட்ட அவருக்கு ஒரு மாதிரியாக இருந்தது. பிறர் கண் துடைப்பதற்காக அப்படிச் செய்திருக்கலாம் எனச் சமா தானம் செய்துகொண்டார்.

இன்னுமொரு அரைமணி நேரம் வம்பளப்பிலே கழிந் தது. அவர்களைத் தவிர மற்றவர்கள் தூங்கி விட்டார்கள். ரோட்டிலும் சந்தடி இல்லை.

"எனக்கும் தூக்கம் வருகிறது. நான் போகிறேன். நீங்களும் படுத்துக்கொள்ளுங்கள்," என்ருள் ராதா.

"நீங்கள் மிகவும் நல்லவர்கள். உங்களோடு முன்பே பழகாமல் போனேமே என்றிருக்கிறது எனக்கு," என்ருர் ராவன்ஞ.

"நான்தான் அப்பொழுதே கேட்டேனே முன்பே ஏன் வந்திருக்கக் கூடாதென்று?" என்ருள் அவள்.

"பெரிய நட்சத்திரமாச்சே! ஒளி கண்களைக் கூசச் செய்துவிடுமே எனப் பயம்," எனச் சொல்லிச் சிரித்தார் ராவன்ஞ.

"ஓ அப்படியா? இப்போ கூட ரொம்பக் கூசிப் போயிருக்கும். கண்களை மூடிக்கொண்டு நன்ருகத் தூங் குங்கள்," என்று கூறி அவள் உள்ளே போய் விட்டாள்.

போனவள் மின்சார விளக்குகளை நிறுத்திவிட்டுப் படுத்துவிட்டாள் என்பதைப் படர்ந்த இருளும், கட்டில் கிரீச்சிட்ட ஒலியும் அறிவித்தன.

இருள் படர்ந்ததும் தானும் எழுந்து கட்டிவில் போய்ப் படுத்தார் ராவன்ஞ. பலவித எண்ணங்கள்

குளமைந்து கூத்திடும் அரங்கமாயிற்று அவரது உள்ளம். அவரது பார்வை தோட்டத்து இருளில், மரங்களுக்கு ஊடே மின்னும் நட்சத்திரங்கள் மீதெல்லாம் படிந்து பின்பு தெருவிற்குத் திரும்பியது. கார்ப்பரேஷன் விளக்குகள் தூரத்திற்கு ஒன்றாக நின்று ஒளி சிதறிக்கொண்டிருந்தன. எங்கிருந்தோ எழுந்து ஒலித்தது உள்ளான்களின் ரீங்காரம்

தூக்கம் பிடிக்கவில்லை ராவன்னாவுக்கு. ராதாமணி தூங்கியிருப்பாளோ என்னவோ! அவரால் நிர்ணயிக்க முடியவில்லை வாயிற் காவற்காரன் பீடிபற்ற வைத்துக் கொண்டு எழுந்து வந்து கொஞ்சநேரம் வெளியே நின்று பின்பு மறைந்தான்.

வெகுநேரம் அங்குமிங்கும் சூன்யப்பார்வை பதித்த வண்ணம் படுத்திருந்தார். திடீரெனத் தெரு விளக்குகள் அணைக்கப்பட்டன. சந்திரோதயம் ஆகிவிட்டது போலும் என எண்ணினார்.

மெதுவாக எழுந்து, பூனைபோல் காலடி எடுத்து வைத்து நடந்து, ஹாலுள்போய் ராதாமணியின் கட்டிலை நெருங்கினார். நெஞ்சு பயத்தால் பட படத்தது. அவள் தூங்குகிறாளா, விழித்திருக்கிறாளா என விளக்கேற்றிப் பார்க்கலாமா என்றால், புதிய இடத்தில் ஸ்விட்ச் இருக்கும் இடத்தைக் கண்டு பிடிப்பது கஷ்டம். திருடன் போல் நகர்ந்து நகர்ந்து கட்டிலில் கை வைத்தார். "ராதா" என மெதுவாகக் கூப்பிட்டார். பதில் இல்லை. பாசாங்கு செய்கிறாளோ என எண்ணினார். திரும்பிப் போய் விடலாமா என்று யோசித்தார். சபலம் அனுமதிக்க வில்லை. 'திக், திக்'கென அடிக்கும் இதயத்தோடு கொஞ்சநேரம் நின்றார். பின்பு துணிந்து மேலே கை வைத்துவிட்டார்.

மார்பில் திடீரென ஏதோ விழுவதை உணர்ந்த ராதா மணி, "யாரது!" எனக் கூவியபடி திடுக்கிட்டு எழுந்தாள். 'பெட் ஸ்விட்'சை அழுத்தி அறையில் ஒளி பரவச் செய்தாள்.

எதிரே அசட்டு முழி முழித்தபடி ராவன்ஞ நிற்பதைக் கண்டதும் அவள் சீற்றம் கொண்டாள் கட்டில் அருகில் விட்டிருந்த தனது 'ஸ்லிப்பரை' கையில் எடுத்துக்கொண்டு, 'போ! மரியாதையாகப் போய் விடு! வீட்டை விட்டு உடனே வெளியே போ! அயோக்கிய ராஸ்கல்!' என இரைந்தாள்.

ராவன்ஞவிற்கு அவமானத்தால் உயிரே போய் விடும் போலிருந்தது "தயவு செய்து சப்தம் போடாதே அம்மா, வேலைக்காரர்கள் எல்லாம் வந்துவிடப்போகிறார்கள். நான் வராந்தாவிற்குப் போய் விடுகிறேன். இரவு இப்போது எப்படிப் போவது? படுத்திருந்து விட்டுக் காலையில் போய் விடுகிறேன். இனி ஒன்றும் செய்ய மாட்டேன். உள்ளே வரவில்லை," என்றார்.

"ஊஹூம். வாட்சுமேனை கூப்பிட்டு ரிக்ஷா கொண்டு வரச் சொல்கிறேன். இந்த க்ஷணமே போயாக வேண்டும்," என்றாள் நடிகை.

"யாரையும் கூப்பிட வேண்டாம். நானே போய் விடுகிறேன்." எனச் சொல்லிப் புறப்பட்டார் அவர்.

கேட் அருகில் வந்து கதவைத் திறக்கச் சொல்லவும் வாட்ச்மேன் இந்த ஆள் என்ன இப்படி என அதிசயித்தான். அவர் மௌனமாக வெளியேறினார்.

ராதாமணி தன்னிடம்தான் வேஷம் போட்டாளா' உண்மையாகவே அப்படியா, தம் மீது ஏதாவது விரோ

தம் கொண்டு அப்படிச் செய்திருப்பாளா என்றெல்லாம் குழம்பியது சிந்தனை. அவளைப்பற்றி அபிப்பிராயம் கூறியவர்கள் எல்லாம் தம்மைப் போலவே அனுபவம் பெற்றுத் தான் அவ்வாறு சொல்லிவந்தார்களோ என நினைத்தார்.

ரஸ்தா வெறிச்சோடிக் கிடந்தது.

கள்ளக்கோழி பிடிக்கப் போகிறவனைப் போலப் போய் அவமானப்பட்டுத் திரும்புகிறோமே என நாணினார். யாருக்கும் இந்தச் சம்பவம் தெரியாமல் போகணுமே என அங்கு மிங்கும் பார்த்தபடியே துரிதமாக நடந்து கொண்டிருந்தார் அவர். பக்கத்தில் ஏதாவது ரிக்ஷா நிற்கிறதா என அவர் கண்கள் துழாவின.


**நீங்கள் இன்னும் வாங்கவில்லையா?**

அறிஞர் சுப. நாராயணன் எழுதிய

**அருமையான கதைப் புத்தகம்**

# "பாட்டாளி"

**விலை ரூ. 0—8—0 * விற்பனை கமிஷன் 25/-**

தபால் சிலவு இனும்

தனிப்பிரதி வேண்டுவோர் 0—9—0 ஸ்டாம்பு அனுப்புக

— தேவைக்கு எழுதுங்கள் —

**எரிமலைப் பதிப்பகம்**

துறையூர்—திருச்சி Dt.

# ஏன்?

★

"ராஜா, இன்னைக்கு உன் ரோஜா வரலையாடா ஐயா?"

சைகிள் 'ஸ்டாண்ட்' அருகே நின்ற மூவரும் நாராம்பு நாதனைக் கண்டதும், ஏககாலத்தில் மேற்கண்டவாறு கேட்டார்கள். கேட்டார்களாவது! கூவினார்கள். அவர்கள் நின்ற நிலை, அவர்களது தொனி, முகங்களிலே பிரதிபலித்த ஏளன பாவம் எல்லாமாகச் சேர்ந்து நாராம்புநாதனுக்கு எரிச்சலூட்டின. வேறுயாராவது அங்கு நின்று, அப்படி அவள் வரவில்லை என்ற சேதியை, சுபாவமாக வெளியிட்டு எங்கே என வினவியிருந்தால், 'ஆ! அவள் வரவில்லையா! ஏன்?' என அலறியிருப்பான். ஆனால் அவர்கள் தினமும் அவன் அவளுடனும், அவள் தம்பியுடனும் வரும்வரை காத்திருந்து, வந்ததும் அவர்களைப் பார்த்துப் பல் இளிப்பது, அர்த்தம் நிறைந்த பார்வை பரிமாறிக்கொள்வது கேலிச்சொல் உதிர்ப்பது என்று ஏதாவது குரங்குச் சேஷ்டைகள் செய்துகொண்டேயிருப்பார்கள். அவனுக்குக் கோபம் வரும். ஆனால் உடன் இருந்த வேணு வனக்குமாரசாமி—அவள் தம்பி—அவனைத் தள்ளிக் கொண்டு போய்விடுவான். போய், 'காவாலிப் பயல்கள்! அவங்களோடு வீண் விவகாரம் எதுக்கு? எதையாவது சொல்லிவிட்டுப் போறுங்க! கவனியாததுபோலப் போய் விட்டால் குலைத்துவிட்டுக் கொஞ்ச நாளிலே ஓஞ்சு போவாங்க' எனச் சமாதானம் செய்வான்.

'இவனுகளா! என்னைக்காவது அவங்க பல் முப்பத்திரண்டையும் உதிர்த்து கையிலே கொடுத்தாத்தான் அவங்க ஓய்வாங்க.' என்பான் நாராம்பு.

துரோபதை வஸ்திராபஹரணத்தின்போதுகூட பொறுமையை உபயோகித்தாராமே தருமர். அவரைப் போல தன்னையும் தமக்கையையும் அவமானத்திற்காளாக்குவதையும் பொருட்படுத்தாது சமாதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டிவந்தான் தம்பி வேணு. அவன் வார்த்தையை மீறி எதுவும் செய்யமுடியவில்லை நாராம்பு. மேலும் அவள்—குழல்வாய் மொழிகூட இருந்தாள். அவளையும் வைத்துக்கொண்டு கலாட்டா செய்யப்போக கல்வரத்தில் அவளுக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்துவிடக்கூடாதே என அவன் பயந்ததும் நேரடி நடவடிக்கையிலிருந்து அவன் விலகிப் போய்க்கொண்டிருந்ததற்கு மற்ருெரு காரணம்; ஆனால் இன்று தடுக்க வேணுவில்லை. தயங்கக் காரணமான குழல்வாய்மொழி இல்லை. வகுப்புகள் ஆரம்பமாகி விட்டதால் மைதானத்திலோ, சுற்றுப் புறத்திலோ, யாரும் தட்டுப்படவில்லை. 'மணியடித்து கிளாஸ் ஆரம்பிச்ச பிறகும் கூடவா இந்த அக்காத்திப் பசங்க எங்களுக்காக இங்கே காத்துக் கொண்டிருக்காங்கோ!' என எண்ணினான். பலநாள் கோபமும் ஒன்று திரண்டு விசுவரூப மெடுத்தது. சைகிளை 'ஸ்டாண்'டில் விட்டுப் பூட்டி விட்டு, 'காரிய'ரிலிருந்த புத்தகங்களை அவிழ்த்து எடுக்கும் போதே 'ஏண்டா, ஐயா மகனுகளே! அவளைப் பற்றி உங்களுக்கு என்னடா அவ்வளவு அக்கரை?' என்ருன்.

'எங்களுக்கு எதற்கு அக்கரை? கொடுக்குப் பிடித்துக் கொண்டு அலையும் உனக்குத்தான் அக்கரை இருக்கும்!'

என்ருன் மும்மூர்த்திகளில் ஒருவன். மற்ற இருவரும் சிரித்தார்கள்.

நாராம்புநாதனின் கோபம் அதிகமாயிற்று. வீணப் பயல்களா!' எனச் சொல்லியபடி புத்தகம் கட்டும் தோல் வாரை ஓங்கினன்.

'மிஸ்டர் நாராம்புநாதன்! என்ன கலாட்டா இது? வகுப்பிற்குப் போகவில்லே? என்னப்பா இது, இங்கே என்ன சச்சரவு?'

பின்னல் பிரின்ஸ்பால் சப்தம் கேட்டது. திரும்பிய நாராம்பு 'இவர்கள் ஒழுங்கீனமாக நடந்து கொண்டார்கள். அதுதான்......' என முணகினன்.

நீ இப்போ நடப்பது மட்டும் ரொம்ப ஒழுங்கோ கலாசாலே மாணவர்களாய்க் கண்ணியமாய் நடந்து கொள்ளுங்கள். வகுப்புகளுக்குப் போங்கள்!' என்ருர் பிரின்ஸ்பால். மறுகணம் அனைவரும் அவ்விடம் விட்டு அகன்றனர்.

வகுப்புக்குப் போகும் வரை நாராம்புவின் உள்ளம் கொதித்துக் கொண்டிருந்தது. ஒவ்வொரு நரம்பும் துடித்தது. அளவுகடந்த கோபமும், அவமானமும் அவனைப் பிடுங்கித்தின்றன. யாரார் எப்படிப் போனுல் என்ன என்று இராமல் அனுவசியமாகப் பிறர் காரியங்களில் தலையிட்டு, அவர்களைப் பற்றி எதுவும் தெரியாமல் இருக்கும் போதே எல்லாம் தெரிந்ததாகப் பாவித்து, வீண் வதந்திகள் விளைவதற் கேதுவாக கலாட்டா செய்து திரியும் பேர்வழிகளை என்னதான் செய்யக்கூடாது என எண்ணினன். வகுப்பை அடைந்ததும் முதன் முதலாக அவன் பார்வை வழக்கமாக வேணு உட்கார்ந்திருக்கும் இடத்திற்கு பாய்ந்தது. அங்கு அவன் இல்லை.

தன் இடத்தில் அமர்ந்த பிறகும் பாடம் கேட்பதில் கவனம் செல்லவில்லை நாராம்புவிற்கு. வேணு ஏன் வர வில்லை? யாருக்காவது உடல் நலக் குறைவாக இருக் குமோ? அன்றி வரும் வழியில் ஆபத்தோ? எனப் பல விதமாக எண்ணி காரணம் காண முயன்றான். அப்படி சுலபத்தில் பிரச்னைகளுக்கு விடை காண முடிந்துவிட்டால் தான் மனிதன் மகத்தான காரியங்களைச் சாதித்துவிட லாமே! யோசித்த நாராம்புவிற்கு மூளைதான் குழம்பியது. மனது சஞ்சலமடைந்தது. அந்த பீரியட் முடிந்ததும் புறப்பட்டுப் போய்விட வேண்டும்; போய்ப்பார்க்க வேண்டும் எனத் தீர்மானித்தான். வகுப்பிற்கு வராமலே போயிருந் திருக்கலாம், வந்து உட்கார்ந்ததும் உடனே கிளம்பிப் போவது நன்றாக இராது எனத் தயங்கினான்.

கடைசியாக அப்போதைய சங்கடங்களுக்கு மாற்றாக நினைவு ஏணியில் படிப்படியாக ஏறி பழைய கால இன்பச் சம்பவங்களுக்கு இடையே உலவி நிம்மதி காண முயன் றான்.

குழல்வாய் மொழி கள்ளங்கபடற்ற சிறுமியாகப் புள்ளிமான் போல் துள்ளி விளையாடித் திரிந்த சமயத்தில் அவர்கள்—அவளது குடும்பத்தினர்—பக்கத்து வீட்டை விலைக்கு வாங்கி அதில் குடியேறினர். விரைவிலேயே அண்டை வீட்டுக்காரர்களுக்கிடையே அத்தியந்த நட்பு ஏற்பட்டது. ஒருவர் வீட்டிற்கு மற்றவர் வருவது போவது, குழந்தைகள் ஒன்றாக லூட்டி அடிப்பது, பள் ளிக்கூடம் போவது என்று இப்படித் தாராளமாகக் கலந்து பழகினர். வயதில் கொஞ்சம் மூத்தவள், படிப் பிலும் ஒரு வகுப்பு முந்திப் படிக்கிறாள் என்ற சலுகை காரணமாகக் குழல்வாய் மொழி வேணுவையும் அவனையும் அதட்டி அட்டகாசம் செய்வாள். பள்ளிக்கூடம் போகும்

பாதையில் தானே தலைமை வகித்து நடத்திச் செல்வாள். புட்டாப்போட்ட கருப்புப் பாவாடையும், சீட்டி பாடியும் அணிந்து, மல்லிகைப் பூக் கொத்து அலங்கரிக்கும் ஜடையுடன் முன்னால் நடந்து அவள் ஓரமாவா, அப்படி இப்படி என்று எச்சரித்து நடந்ததையெல்லாம் எண்ணிப்பார்க்க நாராம்புவிற்கு இன்பமாக இருந்தது. இடையிடையே அவள் தாயும், அவன் அம்மாவும் மற்றும் பக்கத்துவீட்டுக்காரர்களும் பொழுது போக்கிற்காக வம்பளந்து கொண்டிருக்கையில் நடைபெற்ற சம்பவங்களை நினைத்துப் பார்த்தான்.

அவனைக் கண்டதும் அவள் தாய் சொல்வாள் 'தம்பி மட்டும் நம்ம ஜாதியாய் இருந்து, வயசும் அவளைவிட அதிகமாய் இருந்தால் நம்ம தங்கச்சியை அவனுக்குக் கட்டிக்கொடுத்திடலாம்.'

'வயசைப்பற்றிக்கூடப் பரவாயில்லை நாலு புளியங் கொட்டையை முழுங்கச் சொன்னாப் போச்சு, ஆனால் உயர்ந்த ஜாதிக்காரரான அவங்க அம்மா உன் வீட்டிலே பெண் கொள்ளச் சம்மதிக்கணுமே!' என்பாள் ஒருத்தி.

'இந்தக் காலத்திலே அதெல்லாம் யாரு கவனிக்கிரா,' எனப் பதிலளிப்பாள் அவன் அம்மா. ஆனால், அவள் பதில் ஒப்புக்குச் சொல்லப்பட்டது; உண்மையானது அல்ல என்பது, பின்னால் அவள் வீட்டிற்கு வந்து 'புளு, புளு'ப் பதிலிருந்து தெரியும்.

அந்தக் காலத்திலெல்லாம் ஜாதிப் பாகுபாடுகள் மீது அவனுக்கு ஏற்பட்ட ஆத்திரம்!

அதன் பிறகு காலத்தோடு அவர்கள் வளர்ச்சியடைந்து அவள் 'பெரிய மனுஷி'யான பிறகு நடந்து கொண்ட விதங்கள்! அதை இப்பொழுது நினைத்த போது

கூட எவ்வளவோ ஆனந்தமாயிருந்தது. பெரியவளான பிறகு பள்ளிக்கூடம் போக வேண்டாம் என நிறுத்தி விட்டார்கள். வேணுவைத்தேடி அடிக்கடி அவள் வீட்டிற்குப் போகும்போது அவள் ஓடி ஒளிந்தது, தப்பித் தவறி எதிரிலே பட்டுவிட்டால் கன்னம் குப்பென்று சிவக்க, ஒரு மென்னகை சிதறிவிட்டு, மின்னல் போல் மறைவது எல்லாம் அவனுக்கு வாழ்வில் 'சுதாரிப்பு' ஊட்டிய சம்பவங்கள். ஆனால் அவள் அவனோடு பேசமாட்டாள். எங்கிருந்தோ நாணம் வந்து அவளைக் கவிழ்ந்து கொண்டு, முன்பிருந்த குழல்வாய் மொழிதானா அவள் எனச் சந்தேகிக்கச் செய்தது.

பிறகு அவள் திருமணம் வந்தது. எங்கிருந்தோ வந்த ஒருவன் அம்மி மிதித்து, அருந்ததி காட்டி அழைத்துப் போனான் அவளை. கணவன் வீடு போன ஒரு மாதத்திற்கெல்லாம் திரும்ப வந்துவிட்டாள். அவள் புருஷனை ஏதோ வியாதி கவர்ந்து சென்றுவிட்டதாம்.

பிறந்தகம் வந்த ஒருவருஷம் துயரத்திலேயே கழிந்தது நடந்தது நடந்த பிறகு வருந்தி என்ன பயன்! மீண்டும் படிக்கட்டும்; படிப்பிலாவது ஒரு ஆறுதல் ஏற்படும் என்றார்கள் அநேகர். சம்பிரதாய முறைக்கு விரோதமாக நடக்கலாமா என அஞ்சினர் அவளது தாயும் தந்தையும். கடைசியாக இணங்கினர். மீண்டும் அவள் பள்ளிக்கூடம் வந்தாள்.

இடைக்காலத்தில் அவனும், வேணுவும் மேல் வகுப்பிற்குப் போய்விட்டார்கள் இருந்தும் மூவரும் முன்போல் ஒன்றாகவே கிளம்பி, கலாசாலை வரை வந்து, பின் அவள் அவளது வகுப்பிற்கும், அவர்கள் அவர்களது வகுப்பிற்குமாகப் பிரிந்து செல்வது வழக்கமாயிற்று. வழி

யில் முன்னளவு கலகலப்பு இன்றி, மோனச் சிந்தனையிலாழ்ந் தவளாய் வருவாள் குழல்வாய் மொழி. கலாசாலை முன் நின்று இவர்களைக் கேலி செய்யத் தொடங்கியவர்களைக் கண்டதும் தான் இனித் தனியாக வருவதாகச் சொன்னாள் பலமுறை. அப்பொழுதெல்லாம் வேணு அது சரியல்ல, கேலி செய்பவர்கள், அவளைப் பின் தொடர்ந்து வந்து அதி கமாகக் 'கோட்டா' பண்ணத் தொடக்காகிவிடும் எனச் சொல்லி மறுத்துவிட்டான்.

இப்படியாக அவர்கள் வாழ்வின் பல சம்பவங்கள் தொடர்பற்ற நினைவுகளாகச் சிந்தையில் எழுவே நாராம்பு நாதன் அவற்றைப் பற்றி யோசித்தபடியே நிகழ்காலத் திற்கு .வந்தான்.

அன்று அவசர அலுவல் காரணமாக விடியற்கருக் கலிலேயே எழுந்து, சைகிளை எடுத்துக்கொண்டு பக்கத்து ஊருக்குப் போகவேண்டி வந்தது. நேரமாகும், அப்ப டியே நேராகக் கலாசாலைக்கு வந்துவிடலாம் என்று புத் தகங்களை எடுத்துக்கொண்டு புறப்பட்டான். வேணுவிடம் அச்செய்தியைச் சொல்லும்படி தன் வீட்டில் அறிவித்து விட்டுக் கிளம்பினான். கலாசாலை வந்தபொழுதும் அவர் களைக்காணோம். காரணம்?

வகுப்பு முடிந்ததற் கறிகுறியாக மணியோசை ஒலித்து ஓய்ந்தது. புத்தகங்களை எடுத்துக்கொண்டு வெளி யேறி, சைகிளில் வீடு நோக்கி விரைந்தான்.

தெரு முனையை அடைந்ததுமே அவள் வீட்டிற்கு முன்னால் மனிதனது அந்திம யாத்திரைக்கு வேண்டிய உப கரணங்கள் சேமித்து வைக்கப்பட்டிருப்பதைக் கண்டான் அவ்வீட்டுத் திண்ணையிலும், அவன் வீட்டுதிண்ணையிலும் சிலர் குழுமியிருந்தார்கள். யார் இறந்துவிட்டது? சாவு

திடீரென அங்கு யார்மீது கவிந்தது? வேகமாக வீட்டை நெருங்கியபொழுது அவள் வீட்டிலிருந்து எழுந்த ஒப்பாரி ஓலம் கேட்டது. திண்ணைமீது விம்மும் குரலும், வீங்கிச் சிவந்து, நீர்சிந்தும் கண்களுமாக அமர்ந்திருந்தான் வேணு. அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. தன் வீட்டில் விசாரிக்கலாமென்று அவசரமாக உள்ளே போனான். அவனது அம்மா இல்லை பக்கத்து வீட்டிற்குப் பிலாக்கணம் பாடப் போயிருந்தாள். வேலைக்காரச் சிறுமியை விசாரித்ததில் பக்கத்து வீட்டுச் சின்னம்மா செத்துப்போனதாகத் தெரிவித்தாள். • அவனுக்கு ஒரே திகைப்பாகப் போய்விட்டது. அவசர அவசரமாகச் சட்டையைக் கழற்றி எறிந்துவிட்டு ஒரு துண்டை எடுத்துக்கொண்டு பக்கத்து வீட்டிற்குப் போனான்.

வேணுவிடம் போய் என்ன என்று விசாரித்தான்; அவன் ஒன்றும் பதில் சொல்லாமல் 'ஓ'வென அலறினான்.

உள்ளே போனதும் பட்டாசாலையில் குளிப்பாட்டி கோடியுடுத்தி குழல்வாய்மொழியைக் கிடத்தி இருந்தார்கள். செந்தாமரை போன்ற எழில் வீசும் அவள் வதனத்திலே நீலம் புரையோடியிருந்தது போல் தெரிந்தது. மற்றப்படி கண்ணுறங்குபவள் போல்தான் காணப்பட்டாள். அருகே நின்ற ஒருவரிடம் அவளுக்கு என்ன செய்தது என வினவினான்.

'வாய்வுக்குத்து' எனச் சுருக்கமாகப் பதிலளித்துவிட்டு வெளியேறினர் அவர்.

'எல்லாம் தயாராகிவிட்டது, எடுத்து வாருங்கள். என்ற சப்தம் எழுந்தது வெளியிலிருந்து.

எதையும் கவனியாது தனது கடமையையே கருத்தாகக் கொண்டவன் போல் ரெட்டைச் சங்கை நீட்டி முழக்கி

ஞன் 'பண்டுவெ' முத்த. பெண்களின் பிலாக்கணம் எவ்வியது.

நேற்றுவரை குழல்வாய் மொழியாக நடமாடிக் கொண்டிருந்த சடலத்தை எடுத்துப்போய் பாடையில் பிணைத்து தூக்கி நடந்தார்கள். பிரேத ஊர்வலம் கிளம்பியது; நாராம்பு நாதனும் இயந்திர ரீதியில் கலந்தான். முந்தின நாள்வரை குத்துக்கல்போல் இருந்த அவளுக்கு 'வாய்வுக்குத்தா?' அவள் எப்படிச் செத்தாள்? இறந்தது ஏன்? என்ற பிரச்னைகள் எழுந்தன. விடைகாண முடியாமல் அவன் மயானம் நோக்கிக் கூட்டத்துடன் போய்க் கொண்டிருந்தான்.

விஷமருந்தித் தற்கொலை செய்து கொள்பவர்களைக் கூட வாய்வுக்குத்தினல் இறந்தார்கள் என்று சொல்லி, இரண்டு மூன்று முருங்கை இலைக்கொத்தை அடையாள மாகக் கசக்கிப் போட்டுவிட்டு, அவசர அவசர மாகக் கொண்டுபோய்த் தகனம் செய்துவிடுவார்கள் என்று எவ்வளவோ கதைகள் கேட்டிருக்கிறுன் அவன். குழல்வாய்மொழியின் முகத்திலும் நீலநிறம் படிந்திருந்ததே, ஒருவேளை இவளும் விஷம் குடித்துத்தான்........

சே! இவள் எதற்காகத் தற்கொலை செய்துகொள்ள வேண்டும்?' என அச்சந்தேகத்தை ஒதுக்கித் தள்ளினன்.

மயானத்தை அடைந்ததும், வேணுவைத் தனியாக அழைத்துப்போய், 'அக்காளுக்கு என்னடா செய்தது? நேற்று ராத்திரிக் கூட ரொம்ப நேரம் படித்துக் கொண்டிருந்த மாதிரி தெரிந்ததே! விளக்கு வெகுநேரம் எரிந்ததே! இன்று காலையில் திடீரென என்ன விபத்து நேர்ந்து விட்டது? என விசாரித்தான்.

அவ்வளவு நேரமும் ஒருவாறு சிரமத்துடன் அடங்கியிருந்த வேணுவின் அழுகை மீண்டும் பலமாயிற்று. 'கேவிக் கேவி' அழத் தொடங்கினன் அவன். 'என்னடா விஷயம்? ஏனடா இப்படி அழுகிருய்? அவள் செத்துப் போய்விட்டாள். இனி அழுது என்ன பிரயோஜனம்?' என ஆற்ற முயன்ற நாராம்புவிற்கு, அழுகையின் ஊடே கிடைத்த பதில் 'அவள் செத்ததற்கு இந்தப் பாவிதான் காரணம்' என்ற வார்த்தைகள் தான்.

அந்தப் பதில் நாராம்புவைத் திகைக்க வைத்து விட்டது. குழல்வாய்மொழி சாக வேணு காரணமா? வேணுவா விஷம் கொடுத்திருப்பான்? அவன் அவ்வளவு கொடியவனு? எதையுமே நம்ப முடியவில்லை அவனுல். அந்த வார்த்தைகளைச் சொல்வதற்கே வேணு மிகவும் சிரமப்பட்டானுதலால், அவனை மேலும் தொந்திரவு செய்ய வேண்டாம், சௌகரியமாக விஷயத்தை விளக்கம் செய்து கொள்ளலாம் என விட்டு விட்டான்.

கலாசாலைக்கு இரண்டு நாள் லீவு எழுதிப்போட்டு விட்டு, நண்பனுடனேயே இருந்தான் நாராம்பு. வேணு சோகமே உருவாய், அதிகம் எதுவும் பேசாமல், கேட்ட கேள்விகளுக்கு அரை குறையாகப் பதில் சொல்லுவதும் வற்புறுத்தல்களுக்கு இணங்கி, 'அணில் கொரிப்பதை'ப் போல கொஞ்சம் சாப்பிடுவதுமாக இருந்தான். அவன் மட்டுமென்ன? அவன் வீட்டிலுள்ளவர்களும் அப்படித் தானிருந்தனர். நாராம்புவும் அவனது தாயும் தான் தங்கள் வீட்டிலிருந்து உணவு எடுத்துப் போவது, அனைவரையும் வற்புறுத்திச் சாப்பிடச் செய்வது, ஆறுதல் கூறுவது அனைத்தையும் கவனித்தனர். 'வங்கிழடு எதுவுமா செத்துப் போச்சு எல்லோருக்கும் காகிதம் போட்டுத் தெரி

விக்க! இளஞ்சாவு; செய்தியைப் பராபரியாகக் கேட்டு வருகிறவர்கள் வரட்டும்' என அக்கம்பக்கத்தவர் அபிப்பிராயம் கூறியதால் உறவினர் யாருக்கும் கடிதம் போடவில்லை. எனவே, துஷ்டி விசாரிக்க என அதிகப்பேர் வரவில்லை.

புரியாத மர்மமாக, அவனது இதயத்தில் அடிக்கடி எழுந்து அல்லலுறுத்தும் பிரச்னையாக இருந்த போதிலும்; அந்தச் சாவிற்கும் வேணுவிற்கும் எப்படிச் சம்பந்தம் என்ற விஷயம் பற்றி பேச்சையே வேணுவிடம் நாராம்பு எடுக்கவில்லை.

மயானத்திலிருந்து திரும்பிய அன்று தன் தாயை விசாரித்துப்பார்த்தான். தான்தான் காரணம் என்று வேணு சொன்னதைக் கூட சாடைமாடையாகக் குறிப்பிட்டான்.

'மூதிகளைப் போகச் சொல்லு. இவனும் எங்காவது போய்ச் செத்துத் தொலைவதுதானே!' என்றுள் அவள். அதற்கு மேல் எதுவும் சொல்லவில்லை. கேட்டதற்கு ஒன்றுமில்லை என்று கூறி அவசர காரியத்தைக் கவனிக்கப் போவது போல் போய்விட்டாள்.

அதனுல் மர்மம் அதிகரித்ததே தவிர விவரம் புரியவில்லை

இரண்டாவது நாள் மாலை நாராம்பு வேணுவை வெளியிலே எங்காவது போய் வரலாம் என அழைத்துப் போனுன். போகும் வழியிலோ, அல்லது நதிக்கரையில் அமர்ந்ததுமோ எல்லா விவரங்களையும் பற்றிப் பேசித் தெரிந்து கொள்ளலாம் என்பது அவன் எண்ணம். சம்மதித்துக் கூடப் புறப்பட்டு வந்துவிட்டான் என்றுலும் வழி நெடுக மௌனமாகவே வந்தான் வேணு. அந்த சமாச்

சாரம் பற்றிய பேச்சு எடுத்தால் உடனே அவன் அழுது விடுவான் என எச்சரிப்பது போலத்தோன்றியது அவனது முகபாவம். எனவே நாராம்பு பேச்சுத் துவக்க அஞ்சிஞன். நாளடைவில் தெரிகிறது, அல்லது அவனுகவே மனம் தேறித் தானுகச் சொல்லும்வரை காத்திருப்பது என முடிவுசெய்தான் ஆற்றங்கரையை அடைந்ததும் இரண்டு பர்லாங்கு தூரம் நடந்தார்கள். இன்னும் ஒரு பர்லாங் போனுல் மயானம் வந்துவிடும் அந்த இடத்திற்குப் போனுல் ஒரு வேளே நண்பனின் சோகம் அதிகரித்தாலும் அதிகரிக்கலாம் எனத் தயங்கினுன் நாராம்பு. எனவே, அப்படியே அமர்ந்து விடலாம் என உட்கார்ந்தான். வேணுவும் மெளனமாக அமர்ந்தான்.

ஆற்றில் அந்த இடத்தில் மிகவும் ஆழமான மடு ஒன்று இருந்தது. ஆறு வேகமாகத்தான் ஓடிக்கொண்டிருந்தது. இருந்தும் ஓடுவது தெரியாமலே தேங்கி நிற்பது போலத் தோற்றமளித்தது அந்த இடத்தில். நண்பர்கள் இருவரும் கருநீல நிற நீர்ப்பரப்பில், கரையோர நாணற் புதர்களில், எதிர் கரையில் தள்ளியிருந்த குன்றுகளில், கூட்டங் கூட்டமாகப் பறந்து செல்லும் காகங்கள் மீது என மாறி மாறிக் கண் பதித்தவாறு மெளனமாக இருந்தார்கள். நாராம்புவிற்கு அப்படி இருப்பது வேதனேயாக இருந்தது. பேசுவதானுல் என்ன பேசுவதென்றும் புரியவில்லே. குழப்பமான நிலேயில் மனது எவ்வளவோ நினேவுகளுக்கு நிலேக்களனுய் இருந்தாலும் மேலுக்கு சாதாரணமாக அமர்ந்திருப்பவன் மாதிரி இருந்தான்.

'இந்தக் கசத்தில் விழுந்து நானும் உயிரை விட்டுவிடலாமா என்றிருக்கு!'

திடீரென அவ்வித அபிப்பிராயம் வேணுவிடமிருந்து கிளம்பக் கேட்ட நாராம்பு திடுக்கிட்டுவிட்டான்.

'உலகத்தில் பிறப்பும் இறப்பும் சகஜம். சாகிறவர்களுடன் அவர்களுக்காக ஒவ்வொருவரும் சாவதென்றால் என்ன ஆவது?' என்றான்.

வேணு பதில் சொல்லவில்லை.

'ஏண்டா உனக்கு என்ன நேர்ந்துவிட்டது? ஏன் முன் மாதிரி என்னோடு கலகலப்பாகப் பேச மறுக்கிறாய்? என்னிடம் எதையோ மறைக்கப் பார்க்கிறாய்? காரணம் என்ன?' என்று உருக்கம் கலந்த தொனியில் கேட்டான் நாராம்பு.

'மறைக்கவில்லை. எப்படிச் சொல்வது என்றுதான் புரியவில்லை நான் மடையன். அடியோடு அறிவைப் பறி கொடுத்து விட்டவன். அதனால் அனர்த்தம் விளைந்தது. அதை ஊருக்கெல்லாம் இன்னமும் தண்டோராப் போடச் சொல்கிறாயா?' என்றான் வேணு. அதற்கு மேல் அவனால் பேச முடியவில்லை. மீண்டும் பழைய கதைதான். விம்மலும், விக்கலும் பேச்சுக்குத் தடையாய் முளைத்தன.

'அழுகையை நிறுத்து. உனக்காகச் சொல்லக் கூடிய நிலை வந்தவுடன் சொல். அதுவரை நான் இனி இதைக் குறித்துக் கேட்டுத் தொந்திரவு செய்யவில்லை,' எனச் சொல்லிய நாராம்பு, புறப்படுவோமா?' என்றான்.

இருவரும் எழுந்து வீட்டிற்குக் கிளம்பினார்கள். மறுபடியும் இருவருக்கு மிடையே மௌனமே நிலவியது. இந்தத் தடவையும் வேணுதான் மௌனத்தைக் கலைத்தான். 'நாராம்பு நான் போனபிறகு நான் எதாவது குற்றம் செய்திருப்பதாக நினைத்தால் நீ என்னை மன்னித்து விடு' என்றான்.

நாராம்புவிற்கு என்ன பதில் சொல்வது எனப் புரியவில்லை. நண்பன் மீது இரக்கம் இல்லாமல் இல்லை. ஆனால்

அவன் நடந்துகொள்ளும் முறை கோபமூட்டுவதாயிருந் தது.

'அசட்டுத்தனமாகப் பேசாதே. நாளையிலிருந்து காலேஜுக்குவா. வீட்டிற்குத்தான் யாரும் துஷடிக்கு வருவதில்லையே. இங்கேயேயிருந்தால் இதே நினைவாகத் தானிருக்கும். மிதமிஞ்சிய சோகத்தில் விரக்தி விளைவது இயல்பு. காலேஜுக்குப் போனால் எல்லாம் சரியாகி விடும்,' என்றான்

வேணு 'உம்'மென்றுதானிருந்தான்.

'என்ன நாளைக்கு வருகிறாயா?'

'இல்லை. நான் வர இன்னும் இரண்டு நாட்களாகட் டும்,' எனப் பதிலளித்தான் வேணு.

'உன் பிரியம்,' எனச் சொல்லிப் பிரிந்தான் நாராம்பு.

ஒருவருக்காக மற்றவர்கள் அனுதாபம் அறிவிப்பதும், துன்பம் துடைக்கத் துணை புரிவதும் ஓரளவிற்குத் தான் சாத்தியம். அவரவர் கவலைகளே அவரவருக்குப் பெரி தாக—அன்றாட வாழ்வில் மனிதனை அழுத்தும் சுமையாக —ஆக்க எவ்வளவோ விஷயங்கள் உள்ளன.

நாராம்புநாதன் மறுநாள் முதல் கலாசாலைக்குப் போகத் துவங்கி விட்டான். இப்பொழுதெல்லாம், குழல்வாய்மொழியின் சோக முடிவை அறிந்ததனால், வழக் கமாகக் கேலி செய்பவர்கள் அவனைக் கேலி செய்வதில்லை. பதிலாக அனைவரும் அவளது துரித முடிவிற்குக் காரணம் என்ன என்று அவனை விசாரித்தார்கள். அவனுக்கே தெரி யாதபோது மற்றவர்களுக்குப் பதில் சொல்வது எப்படி? 'எனக்குத்தெரியாது,' என்று எல்லோருக்கும் பதில் சொல்லிவந்தான். அவர்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. அந்தப் புதிருக்கு விடை வேணுவிடமிருந்து கிடைக்கும்

என்ற நம்பிக்கையுடன் கலாசாலைக்குப் போகும்போது காலையில் அல்லது மத்தியானம் வேணுவைப் பார்த்து விட்டுப் போவான். மாலையில் வீடு திரும்பியதும் வேணு வின் வீட்டிற்குப் போய் அவனுடன் பொழுதைக் கழிப் பான். ஆனல் நோக்கம் ஈடேற வில்லை. வேணு சதா உம்மணு மூஞ்சியாகவே காட்சி தந்தான். வரவர மெலிந்து வந்தான். உள்ளம் தேறி தெளிவு ஏற்பட வகை யிருப்பதாகத் தெரியவில்லை.

ஒரு வாரம் கடந்தது. ஒரு நாள் மத்தியானம் வழக் கம்போல் நாராம்புநாதன் பக்கத்து வீட்டிற்குப் போனுன். உள்ளே வேணுவின் தந்தை குரல் ஒலித்தது, 'வேணு சாப் பிட்டாச்சா?'

'அவன் சாப்பிடுவாஞே எக்கேடு கெடுவாஞே? எனக்கு அதா கவலை ?'

வேணுவின் தாயார்தான் அப்படிப் பதிலளித்தாள்.

சந்தர்ப்பம் சரியில்லை; சாயங்காலம் வந்து பார்த்துக் கொள்ளலாம் எனத் திரும்பிவிட்டான் நாராம்பு. மகனைப் பறி கொடுத்த துயரம் தாயை அவ்வாறு பதில் சொல்லத் தூண்டியதா ? அல்லது மகன்மீது கோபமா? பெற்ற தாயே கரித்துக் கொட்டும்படி என்ன குற்றம் செய்து விட்டான் அவன் ? எல்லாம் மிகவும் விசித்திரமாக இருக் கிறதே என எண்ணினுன்.

மாலையில் திரும்பியதும், உடனே வேணுவைப் பார்க் கக் கிளம்பினுன். வீட்டிலே அவன் இல்லை.

'அவன் அயலூர் போயிருக்கிறுன். இந்தப் புத்தகங் களை உன்னிடம் கொடுக்கச் சொன்னுன்' என அழகாகக் கட்டி வைக்கப்பட்டிருந்த நாலைந்து புத்தகங்கள் கொண்ட ஒரு கட்டைக் கொடுத்தாள்.

புத்தகக் கட்டை வாங்காமல் தயங்கி நின்ற நாராம்பு, 'அவனாகத்தான் போகிறேன் என்று போனானா? இல்லை நீங்கள் அனுப்பினீர்களா? எப்பொழுது திரும்ப வருவான்?' என விசாரித்தான்.

'ஏன் இப்படிக் கேட்கிறாய் நான்தான் அனுப்பினேன் வர ஒரு வாரமாகும்,' என்றாள் அவள்.

அதற்குமேல் எதுவும் கேட்க முடியவில்லை. அவள் பதில் சொன்னமாதிரி நம்பிக்கை யூட்டுவதாயிருந்தது. ஆனால் ஒரு வாரத்தில் திரும்புபவன் இவ்வளவு அக்கரையாக எதற்காகத் தன்னிடம் வாங்கிய புத்தகங்களைக்கட்டிக் கொடுத்துவிட்டுப் போகவேண்டும்? புத்தகக் கட்டை வாங்கிக்கொண்டு வேகமாக வீடு திரும்பினான். போனவுடன் கட்டை அவிழ்த்துப் புத்தகங்களைப் புரட்டினான். ஒரு புத்தகத்திற்குள் ஒரு கவரில் ஒரு கடிதம் இருந்தது. அதை எடுத்துப் படித்தான்.

இனிய நண்ப,
விடைபெற்றுக் கொள்கிறேன்.

ஒரு வாரத்திற்கு முன் கேட்டுக்கொண்டதையே மீண்டும் வேண்டிக் கொள்கிறேன். உன் விஷயத்தில் எனக்குத் தெரியாமலே நான் ஏதாவது தீங்கு இழைத்திருந்தால் அதை மன்னித்துவிடு.

எவ்வளவோ முறை கேட்டாய். சொல்ல முடியாததால் சொல்லவில்லை. இப்பொழுது சொல்லியிருக்கிறேன். படித்து முடித்ததும் கிழித்து எறிந்துவிடு.

இப்பொழுது மகத்தான தவறாகத் தோன்றுகிறது. நினைத்திருந்தால் தவிர்த்திருக்க முடியும் என்று படுகிறது. ஆனால் உணர்ச்சிச் சூறைவந்து மோதும் போது சாவ

தானமாகச்சிந்தித்து முடிவுகட்ட அவகாசமேது? ஒரு முறை தவறிவிட்டால் பின்பு கவலையே இல்லாமல் திரும்பத் திரும்ப தவறில் நீந்தத்துணிந்துவிட முடிகிறது—யார் கண்ணிலாவது அகப்படும் வரை.

எங்கள் விஷயத்திலும் அப்படித்தான் நேர்ந்தது. முதலில் எப்படி வழுக்கி விழ நேர்ந்தது என்பதை எல்லாம் நான் வர்ணித்துக் கொண்டிருக்க விரும்பவில்லை. முடிவைக் கூறுகிறேன் அக்காள் கதை நீ அறிந்தது தான். வாழ்வின் இன்பத்தை ருசிக்கத் தொடங்கிய போதே தட்டிப் பறிக்கப்பட்டவள். உணர்ச்சி வசப்பட்டு எப்படியோ என்னைத் தவறுக்குத் தூண்டினுள். விளைவுகளைச் சிந்தித்து பாதுகாத்துக் கொள்ளத் தவறி 'வீழ்ந்தேன் நானும். அவளது மரணத்திற்கு முன்தினம் வெகு நேரம் விளக்கு எரிந்து கொண்டிருப்பதைப் பார்த்ததாகக் கூறினுயே! அந்த விளக்குத்தான் எங்கள் செயலை அம்பலமாக்க உதவியது. இன்பபோதையிலே எங்களை மறந்து விளக்கை அணைக்காமலே உறங்கிவிட்டோம். வெகு நேரம் விளக்கு எரிவதை தற்செயலாக வெளியே வந்த அன்னை பார்த்தது, வெகு நேரமாகிவிட்டது, படித்தது போதும், படுத்துக்கொள்ளச் சொல்லலாம் என எண்ணி மாடிக்கு வந்திருக்கவேண்டும். வந்தவள் எங்கள் கோலத்தைக் கண்டு எப்படி இடிந்து போயிருப்பாள் என்பதை இப்பொழுது நினைத்தாலும் அதளபாதாளத்தில் அமிழ்வது போலிருக்கிறது. விளக்கை அணைத்துவிட்டு அவள் போயிருக்கவேண்டும். எங்களை எழுப்பவில்லை. அவள் அவ்வாறு வந்து போயிருக்கிருள் என்பதே மறு நாள் காலையில்தான் தெரியும். அதிகாலையில் எழுந்தேன். அக்காள் முன்பே கீழே போயிருக்கக்கண்டேன். மாடிப்படி இறங்குகையில் அக்காளை அன்னை வைது கொண்டிருப்பது தெரிந்

தது. 'மூதி! உன்னைக் குளத்திலே கிணத்திலே தள்ளிக் கொல்லலாமா என்றிருக்கு. நாளைக்கு வாயிலே வயித் துலே வந்தால் நாலுபேர் என்னைப் பார்த்துச் சிரிக்கவா? எங்க வம்சத்திலே, வழியிலே இல்லாம எனக்குன்னு எங் கிருந்து வந்து சேர்ந்தயோ?' மெதுவாக நழுவி வெளியே போய் விட்டேன். வழக்கத்திற்கு விரோதமாக வெகு நேரம் கழித்துத் திரும்பியபொழுது அக்காள் வாந்திஎடுத்த வண்ணம் ஏதோநோயால் துடிப்பதுபோல் துடித்துக் கொண்டிருந்தாள். அப்பா எங்கோ போயிருந்தவர் அப் பொழுது தான் வந்தார். டாக்டர் யாரையாவது கூட்டி வரட்டுமா என்ருர். 'அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம். நீங்க வரதுக்குள்ளே அவ போயிடுவா. பிறகு விபரீதங் களெல்லாம் வேறே விளையப்போகுது. விஷம் குடிச்சிச் சாகணும்னு விதி இருக்கிறபோது என்ன செய்ய முடி யும். செத்துத் தொலையட்டும்,' என்ருள். சம்பிரதாயப் பண்புகள் அன்னையின் இருதயத்தைக் கூடக் கல்லாக்கக் கூடியது என்பதை அன்று தான் உணர்ந்தேன். அதிகம் வளர்த்த விரும்பவில்லை. யாரைக் குறை கூறுவது என்ப தும் தெரியவில்லை. வீட்டில் இருப்பது நரக வேதனையாகத் தான் முடியும். வெளியேறுகிறேன். தற்கொலை செய்து கொள்ளவேண்டும் என்ற நினைவு மீண்டும் தலைதூக்கா திருக்குமானல் மீண்டும் எப்பவாவது சந்திக்கலாம்.

அன்பன்
வேணு.

கடிதத்தைப் படித்து முடிந்ததும் புதிர்களாக அலைக் கழித்த பிரச்னைகளுக்கு விடைகிடைத்தது. ஆனல் இளம் உள்ளங்களை உணர்ச்சி சூறையாகப் பற்றும் என்பதை உணர்ந்து அதற்கு முன்னதாகவே பாதுகாப்பு ஏற்படுத்த, சம்பிரதாயக் குட்டைகளில் ஊறிய மட்டைகள் ஏன் முன் வருவதில்லை என்பது புரியவில்லை.

# கிளர்ச்சி.

★

அப்பொழுது மனோகரமான மாலை வேளை அல்ல. இனிய தென்றல் உலவிக்கொண்டிருக்க வில்லை. நறுமண மலர்க் கொடிகள் மிகுந்த நந்தவனத்திலும் அவன் நிற்க வில்லை.

டவுனிலிருந்து ஜங்ஷன் பிளாட்பாரத்திற்குக் கொணர்ந்து சேர்த்த வண்டியிலிருந்து இறங்கி, மறு வண்டியை எதிர்பார்த்துக் காத்து நின்ற கும்பலோடு கும்பலாக ஐக்யமானான் ராமநாதன். இரவு நேரம். மணி ஒன்பதரை. பனி கடுமையாகப் பெய்துகொண்டிருந்தது. சுற்றுப் புறத்தில் நின்ற மரங்களெல்லாம் குளிரால் விறைத்து நடுங்கியவைபோல் இலைகள் ஒடுங்கி நின்றன. ஏகக் கும்பல் பிளாட்பாரத்தில். பனிக்குப் பாதுகாவலாகப் 'பிளாட் பார'க் கூரை யடியில் நெருக்கி நின்றனர் ஜனங்கள். அங்கு இடமில்லாததால் பலர் தலையில் துண்டை முக்காடாகப் போட்டுக் கொண்டும், முண்டாசாகக் கட்டிக் கொண்டும், திறந்த வெளியிலும் மரத்தடிகளிலும் நின்று வம்பளந்து கொண்டிருந்தனர். கும்பலைப் பற்றியும், யுத்த காலப் பிரயாண அசௌகர்யங்கள் பற்றியுமே பேச்சு அடிபட்டது. அவன் ஒரு ஓரமாகப் போய் நின்று அனைத்தையும் கவனித்தான்.

எந்த ஸ்டேஷனிலும் எப்பொழுதும் இப்படி ஒரே கூட்டமாக இருப்பதைக் காண ஆச்சர்யமாக இருந்தது அவனுக்கு. என்ன காரணம்? வண்டிகள் குறைந்ததாலா?

அல்லது ஜனத்தொகை பெருகியதா? யோசித்தபடியே 'பிளாட்பா'ரத்தில் அங்கு மிங்கும் உலவினன். திடீரென ஒரு நினைவு பிறந்தது. கூட ஒரு அழகி இருந்து அவளை யும் உடனழைத்துச் செல்ல வேண்டி வந்தால்! இந் நெருக் கடிகளைச் சமாளித்து அவளைக் கூட்டிச் செல்வது எவ்வ ளவு சிரமமாக இருக்கும்! இந் நினைப்பு ஒரு நிமிஷம்தான் நிலைத் திருந்தது. மறுகணம் அவன் விழிப்படைந்தான். பெண் நினைவையே அகற்றி, வாழ்வு முழுவதும் பிரம்மச் சாரியாகவே இருந்து, ஏதோ பிரமாத லட்சிய சேவை செய்யப் போவதாகப் பேசி வருபவன் அவன். எனவே அவன் மனதில் அவ்வித எண்ணம் தோன்றுவானேன்? சூழ்நிலையிலே தென்பட்ட அழகி எவளின் உருவமாவது அவன் சிந்தனையில் அவ்விதச் சலனம் ஏற்படுத்தி இருக்க முடியுமா? சுற்று முற்றும் பார்த்தான். கண்ணுக்கெட் டிய வரை பெண்கள் யாரையுமே காணவில்லை.

பக்குவ நிலை பெருத உள் மனதின் வெறியாட்டம் என்று எண்ணி அந் நினைப்பைத் துடைத்து விட முயன் ருன். ஆனல் அது அவ்வளவு சுலபமாக இல்லை. அவனது முயற்சிகளையும் மீறி அந்தச் சிந்தனை தோன்றிக் கொண்டே இருந்தது. 'ஆமாம், ஒரு அழகி உன்னுடன் பிரயாணம் செய்யப்போகிருள், உனது வைராக்கியத்தைப் பரிசோ திப்பவளைப் போல' என்று தன்னுள் ஏதோ உணர்த்துவ தாக உணர்ந்தான். 'பின்னல் நிகழவிருக்கும் சம்பவங்கள் முன்னதாகவே சிந்தையில் ஒளி வீசும் என்பார்களே அந்த ரகத்தைச் சேர்ந்ததோ இது! சரி பார்ப்போமே!' என நினைத்தான். பின்பு 'நாமென்ன திரிகாலமும் உணர்ந்த ஞானியா' என்று கூறிச் சிரித்துக்கொண்டான். இவ்வள விற்கும் அவ் வெண்ணம் அவன் நினைவை விட்டு அகல வில்லை. உண்மையாகவே அழகி யாராவது வருகிருர் களோ என அவன் கண்கள் ஆராய்ந்தன.

கொஞ்ச நேரத்தில் ஒரு கும்பல் வந்தது. அவ்வளவும் பெண்களே! ஆனால் ஒருத்தியாவது அழகியாய் இருக்க வேண்டுமே! கூலி வேலை செய்துவிட்டு ஊர் திரும்பும் பெண்கள்.

'சபாஷ்! மனதின் நல்ல வெறியாட்டம், அதற்குத் தகுந்த ஏமாற்றம்;' எனத் தனக்குத்தானே கூறிக் கொண்டான் ராமநாதன்.

அவனது சிந்தனைகளைத் துரத்தி அடிக்கும் தோரணையில் வெகு வேகமாக வந்து நின்றது ரயில். இருந்த கூட்டத்தில் சாவதானமாக நின்று, இடந்தேடி ஏறுவது என்பது இயலாத காரியம். எனவே, ராமநாதன் அவன் நின்ற இடத்திலே வந்து நின்ற —'எஞ்சி'னுக்கு அடுத்தாப்போலிருந்த—வண்டியிலேயே ஏறினான். ஒரு வண்டிக் கதவு திறக்கப் பட்டால் போதுமே! 'பொல, பொல' வெனக் கும்பல் முழுவதும் அங்கேதானே சாயும்! பின்புற மிருந்து நெருக்கித் தள்ளிய கும்பலால் ரயில் ஏற்றப்பட்டான் அவன். அவனைத் தொடர்ந்து 'மள,மள' வெனப் பலர் ஏறினர்.

ஏழெட்டுப் பேர் உள்ளே ஏறி இருப்பார்கள். உடனே கதவடிப் பெஞ்சுகளில் அக்காட்சியைப் பார்த்தவண்ணம் அமர்ந்திருந்த ராணுவ வீரர்கள் சிலர் தங்கள் சூரத்தனத்தைக் காட்டி மற்றவர்களை வெளியே தள்ளிக் கதவை இழுத்து மூடிவிட்டார்கள்.

அவ்வளவு நேரமும் மங்கலாக எரிந்து கொண்டிருந்த விளக்கு அணைந்துவிட்டது. 'கம்பார்ட்மெண்'டிற்குள் கலவரம். வண்டிக்குள் இருள் படர்ந்ததும் பரஸ்பர அவநம்பிக்கை தலை நீட்டியது. அங்கே ஒவ்வொருவரும் தங்கள் பொருள்களைப் பிறர் 'அடித்துவிடக் கூடாதே

னைப் பத்திரப் படுத்துவதில் ஈடுபட்டனர். ராமநாதனும் தன் கையிலிருந்த பையை மார்போடு அணைத்துக் கைகளைக் கட்டிக் கொண்டான்.

'இங்கேயே ஏன் ஐயா நிற்கிறாய்? உள்ளேபோய் உட்காரேன்?' என உத்திரவிட்டனர் பட்டாளத்து வீரர்கள். முன்னால் நின்றவர்கள் நகர்ந்து பெஞ்சுகளில் நெருக்கிக்கொண்டு அமர்ந்தனர். ராமநாதனும் மெதுவாக முன்னேறி ஒரு பெஞ்சில் அமர்ந்தான்.

இரண்டொரு நிமிஷங்களில் விளக்கு வெளிச்சம் வந்தது. ஆனால் மங்கலாகத்தான்; ஒவ்வொருவரும் அவ ரவர் இடங்களில் வசதி செய்து கொண்டனர். ராம நாதனும் சௌகரியமாக அமர்வதற்காக நகர்ந்தான்.

'குழந்தை படுத்திருக்கான் ஐயா. நெருங்காதே!' என்றார் ஜன்னலருகில் இருந்தவர். அவருக்கு அடுத்தாற் போல் மூன்று நான்கு வயதிருக்கும், ஒரு சிறுவன் படுத் துத் தூங்கிக்கொண்டிருந்தான். பாவம் சிறுவனைத் தொந் தரவு செய்வானேன் என்று இருந்த இடத்திலேயே வசதி செய்துகொண்டான் ராமநாதன்.

'வேறு வண்டிக்குப் போ, ஐயா!

'இது என்ன உங்க சொந்த வண்டியா?'

'சரிதான் போய்யா!'

'இருக்கட்டும் ஸார். நெடுகப் போய்ப் பார்த்து விட் டுத்தான் வருகிறோம். இடம் இல்லை. நல்லா இருப்பே நீ!'

'என்னடா இது எழவா யிருக்கு!'

மேற் கண்டவாறு சம்பாஷணை வண்டிக்குள் இருந் தும் வெளியிலிருந்தும் எழவே என்னவென்றறியத் திரும் பிப் பார்த்தான் ராமநாதன்.

தலைநிறைய சாக்கு மூட்டைகளையும், சாமான்களையும் தூக்கிக்கொண்டு நின்ற போர்ட்டர்கள் மிலிட்டெரிக்காரர்களுடன் சண்டையிட்டார்கள். பின்னால் நின்ற ஒரு கிழவர் சமாதானமாக வேண்டிக்கொண்டு நின்றார். கடைசியாகக் கதவு திறக்கப்பட்டது.

'ஏறுங்க' என்றார் கிழவர்.

அத்தனை நேரமும் அவருக்குப் பின்னால், ஒரு கையில் வீணையும் மறு கையில் ஒரு துணிப் பையும் ஏந்தி நின்றுகொண்டிருந்த ஒரு அழகிய யுவதியும், அவளருகில் நின்ற ஒரு வாலிபனும் உள்ளே நுழைந்தார்கள்.

வாலிபன் போர்ட்டர்களிடம் இருந்த சாமான்களை வாங்கிச் சாமான்கள் வைக்கும் பலகையில் அடுக்கியவை போக பாக்கியை எங்கும் பரப்ப ஆரம்பித்தான். வண்டியிலுள்ளவர்கள் முணு முணுத்தார்கள்.

அவ் வாலிபன் அவ் வழகியின் அண்ணன் வயோதிகர் தந்தை என்பது அவர்கள் பேச்சு மூலம்தெளிவாயிற்று

அந்த அழகி நேராக ராமநாதன் இருந்த இடத்திற்கு வந்து 'ஸார்; இதைக் கொஞ்சம் வைத்துக் கொள்ளுங்கள்' என்று வீணையை அவனிடம் நீட்டினாள்.

அவளது செய்கை அவனுக்கு ஆச்சரியம் அளித்தது. போகட்டும் பெண் என்ற பரிவுடன் அதை வாங்கினான்.

மறு நிமிஷம் அவள் படுத்திருந்த பையனின் கால்களை மடக்கி விட்டு அவன் அருகில் அமர்ந்தாள். ஜன்னலருகில் இருந்தவர் பெண்ணிடம் என்ன பேசுவது என்றெண்ணினாரோ அன்றி மனதிற்குள் புழுங்கி வெளியே மௌனமாயிருந்தாரோ, தம் பையன் தலையைத் தூக்கி மடியில் வைத்துக்கொண்டு இடம் பண்ணிக் கொடுத்தார். சௌக

ரியமாக அமர்ந்ததும் அவள் ராமநாதன் கையிலிருந்த வீணையை வாங்கிக்கொண்டாள். பையை இன்னமும் மடியிலே வைத்திருந்தாள்.

'பையைக் கீழே வையுங்களேன்!'

ராமநாதனது அந்த வேண்டுகோளைக் கேட்டதும் 'அது நிறைய கண்ணாடிச் சாமான்கள் இருக்கின்றன. கீழேவைத்தால் உடைந்து போகலாம்' என்று பதிலளித்து புன்னகைத்தாள் அவள்.

ராமநாதன் ஒன்றும் பதில் பேசவில்லை. அவளோடு ஏன் பேசினேம் என்று கூட எண்ணினன். அவள் நன்ருக அமர்ந்ததும் அவளது உடல் அவன் உடலோடு ஒட்டியது எழுந்து நிற்கலாமா என்ருல் போர்ட்டர்களிடமிருந்து அவள் அண்ணன் வாங்கி அடுக்கிய சாமான்கள் பெஞ்சுக ளுக்கிடையே இருந்த இடம் முழுவதையும் அடைத்துக் கொண்டிருந்தன. 'சே, என்ன!' என்று தன் உடலைக் குலுக்கினன் அவன்.

'நீங்க சௌரியமாக அமர்ந்து கொள்ளுங்கள். சிரமப் பட வேண்டாம்' என்ருள் அவள்.

சாமான்களை எல்லாம் வாங்கி வைத்த அண்ணன் ராமநாதனுக்கு அடுத்தாற்போல் அமர்ந்தான். ராமநாதன் 'ஸார் நீங்க இப்படி வந்து விடுங்களேன்' என்று தனக்கும் அப்பெண்ணிற்கும் இடையில் அவனை வந்து அமரும்படி வேண்டினன்.

'நீங்களே சும்மா இருங்க' என்று சொல்லிவிட்டான் அவன்.

'நீங்கள் கவலை யில்லாமல் இருங்கள் மிஸ்டர்' என் ருள் அவள்.

'அட அநியாயமே!' என முணுமுணுத்தது ராமநாதன் உள்ளம். அக் கிழவர் எதிர் பெஞ்சு ஓரத்தில் நின்று கொண்டிருந்தார்.

'நீங்கள் இப்படி வந்து உட்காருங்களேன்!

ராமநாதனின் அழைப்பைத் தலையாட்டி நிராகரித்த அக் கிழவர் 'நீங்களே இருங்க. அடுத்த ஸ்டேஷனில் இறங்கப் போகிறவன் நான்' எனப் பதிலளித்தார்.

ராமநாதன் சூழ்நிலை மறந்து வேறு சிந்தனையிலீடுபட முயன்றான். முடியவில்லை. அந்த அழகியின் தேக ஸ்பர்சம் அவன் நரப்புகளைக் கிளுகிளுக்கச் செய்தது. அவன் மனப் பாம்பு, கட்டுண்டு அடைபட்டுக் கிடந்த பெட்டியின் மூடியை அவளது ஸ்பர்சம் திறந்து விடவே அது தறிகெட்டுத் தலைதூக்கி ஆட ஆரம்பித்தது. அவள் கைகளைக் கட்டிக் கொண்டு கம்பீரமாக அமர்ந்திருந்தாள். அவள் கண்கள் அவளது வள்ளைக் காதுகளை மறைத்துச் சுருண்டு கருநாகப் பாம்பெனத் தொங்கிய ஜடையை, காதுகளில் நடமிட்டு அசைவுதோறும் கழுத்தை முத்திட்ட லோலக்குகளை, அழகு முகத்தை அலங்கரித்த நாகரிகப் பொட்டை, பவள அதரங்களை, மின்வெட்டி மறையும் புன்னகையை, இருளாடும் கண்களை எல்லாம் எடை போட்டன. அவள் அணிந்திருந்த வெளிறிய நிற ஆடை அவள் அழகுக்கு அழகு பூசியது. ஜன்னல் வழியாக உள்ளே புகுந்து வெளியேறிய காற்று அவள் கூந்தலை அலங்கரித்த மல்லிகை மணத்தை வண்டி முழுவதும் சிதறிச் சென்றது.

வண்டி நகர்ந்தது. நகர நகர விளக்கும் கொஞ்சங் கொஞ்சமாகப் பிரகாச மடைந்தது. என்றாலும் அவ் வண்டிக்குள் போதுமான வெளிச்சம் புகுத்தும் அளவுக்கு ஒளிபெய்யவில்லை. அம் மங்கல் வெளிச்சச் சூழ்நிலை

ராமநாதனின் மனதில் என்ன வெல்லாமோ நினைவுகளைக் கிளறின.

அவன் மன மன்றத்திலே ஆயிரம் ஆயிரம் நினைவுகள் சுழலிட்டன. சீறிப்பட மெடுத்தாடிய மனப்பாம்பு கற்பனு வெளியிலே விளையாடியது. ஒவ்வொருவர் மனதிலும் நல்லது, கெட்டது என இரு பகுதிகள் இருப்பதாகச் சொல்கிறுர்களே அது பொய்யல்ல என்பது இத்தகைய சந்தர்ப்பங்களில் தான் புலனுகிறது. மனதின் நல்ல பகுதி பேசியது:— 'என்னப்பா, நைஷ்டிக பிரமச்சாரி! உனது உறுதிகளைத் தளர விடுகிருயே. மனச் சஞ்சலம் அடைகிருயே!' என எச்சரித்தது.

பெண்ணை விட்டு விலகியே வந்துகொண்டிருந்த ஒருவனை அவளோடு நெருங்குவதால் ஆபத்து எப்படி வந்து வளைகிறது என்ற நினைவு பிறந்தது ராமநாதனுக்கு. மெதுவாகக் கைகளை ஒடுக்க முயன்ருன், கை அவள் உடலில் மோதியது. அவனுக்குச் சுரேல் என்றது. அவள் முகத்தில் எத்தகைய உணர்ச்சி பிரதிபலிக்கிறதெனப் பார்க்க வேண்டுமென்ற சபலம் எழுந்தது. ஏதேனும் சொல்லி விடுவாளோ என்ற பயம் வேறு. மனதின் கெட்டபகுதி' 'அவள்தான் நீ ஒன்றும் கவலைப்படாதே; தாராளமாக இருந்துகொள் எனக் கூறிவிட்டாளே,' எனத் தைரிய மூட்டியது. அவள் பக்கம் திரும்பினுன். அவளது நேர் கொண்ட பார்வை அவன் பார்வையில் பட்டுத்தெறித்தது. அதிலே வெறுப்பு மின்னவில்லை என்பதை அவன் கண்டான். அவனது செய்கைக்காக அவள் வருந்தவில்லை என்பதையுணர்ந்தான்.

அவளது தந்தையும் அண்ணனும் பார்த்திருப்பார்களோ, ஏதாவது எண்ணிக்கொள்வார்களோஎன நினைத்து

அவர்களைப் பார்த்தான். எவ்விதமான சிந்தனையும் பிரதி பலிக்காத முகத் தோற்றத்துடனிருந்தனர் அவர்கள்.

'நீதான் எழுந்து நில்லேன்' என மனதின் நல்ல பகுதி போதித்தது. ஆனால் இன்ப லாகிரியின் போதை யேறிக் கிடந்த மறுபகுதி எழுந்து எங்கே நிற்பையாம்? எனச் சிரித்தது. இரண்டு பெஞ்சுகளுக்கும் இடைவெளியிலே படுக்கை, பெட்டி, சாமான் தட்டு முட்டு, சாக்கு மூட்டை என இக்குடும்பம் பரப்பி இருந்த கடை கிடந்தது. மற்ற இடமெங்கும் கும்பல் இந்தப் பக்கத்தில் சாமான் வைப்ப தற்கிருந்த பலகையைக்கூட இரண்டுபேர் ஆக்ரமித்திருந் தார்கள். அவர்கள் ரயில்வே சிப்பந்திகள். இப் பிரயாண நெருக்கடிச் சமயங்களில் கூடக் குஷிப்பிரயாணம் கிளம்பி யிருப்பவர்கள் 'ப்ரீபாஸி'லே என்பது அவர்கள் சம்பா ஷணை மூலம் விளங்கியது.

அவள் அப்படியே அவன் மீது துவண்டபடியே இருந்தாள். அவள் தந்தையும் அண்ணனும் மௌன மாகவே வந்துகொண்டிருந்தார்கள். ராமநாதன் மனக் கொந்தளிப்பைச் சிரமப்பட்டுச் சமாளித்து வந்தான்.

ஐந்து நிமிஷங்கள் கடந்திருக்கலாம். வண்டி ஒரு ஸ்டேஷனில் நின்று கிளம்பியது. 'என்ன ஸ்டேஷன்?" என்று கேட்டாளவள். 'தெரியாது' என்பதே அவன் பதில்.

கிழவனர் கீழே குனிந்து நிமிர்ந்தவர் ஆரம்பித்தார்:— இந்தச்சேலையிலே சாமான்களைக் கட்டியது யாரு? நன்றாக கட்டப்படாதோ? இத்தனை சாமான்களை ஏன் கொண்டு வரணும்?

'எல்லாம் மதனிதான் கட்டினுள்' என மொழிந்தாள் அம்மெல்லியலாள் தன் கிள்ளை மொழியில்.

'மதனி கட்டினு! மதினியா இப்ப கஷ்டப்படப் போரு? சாமானெல்லாம் கீழே சிந்துதே! கிழவர் முகாரியைத் துவக்கினுர்.

'போனது போக மிச்சம்' என்ருள் மகள்.

'நீ சும்மா இரு. பேசினுல் தொணதொணக்க ஆரம்பிப்பார்,' என மெதுவாக எச்சரித்தான் அண்ணன்.

'நீங்களே சொல்லுங்க, ஸார் வாயில் (Voil) சேலையிலே இவ்வளவு சாமான்களைக் கட்டினுத் தாங்குமோ? என்ருர் கிழவர் ராமநாதனைப் பார்த்து.

என்ன பதில் சொல்வது என்று தெரியவில்லை ராமநாதனுக்கு. 'சரிதான் ஐயா. சாமான் சிந்துவதைப் போய்ப் பிரமாதமாய்க் கவனிக்கப் போய்விட்டீரே! உம் மகளின் மனது சிந்துதே! அதற்குக் காரணம் என்ன? அதை நீர் கட்டிய துணி மெல்லியதா? அல்லது கந்தலா?' என அவன் மனம் பேசியது. வெளியே ஒன்றும் சொல்லாமல் மௌனமாயிருந்தான்.

'மன்னிதான் கட்டியது........'என்ருள் மீண்டும் அவ்வலங்காரி.

'ஆனது ஆகிவிட்டது. இனிப் பேசி என்ன செய்வது. சிந்தியது போக பாக்கி இருக்கு என விடவேண்டியது தான்,' என்ருன் ராமநாதன்.

'இல்லை ஸார் எங்க மதனி இருக்காளே அவ சொன்னுக் கேட்டால்தானே!' என்ருள் அவள்.

ராமநாதன் பதில் ஒன்றும் பேசவில்லை.

பின் பகுதியில் பேச்சு எழுந்தது. 'ஏய் நடுவிலே இருக்கிற ஆளு வேறெல்லா போலிருக்கு!'

எல்லோர் காதுகளிலும் நன்ருக விழுந்தன அவ்வார்த்தைகள். மற்றவர் என்ன எண்ணினுர்களோ! ராமநாத

னுக்கு மட்டும் அவளது செய்கைகளை இதரர்களும் இவ்வளவு நேரமும் கவனித்து வந்திருக்கிறார்கள் அவளுக்கு அவன் உறவு என்று எண்ணி இருந்திருக்கிறார்கள் என்பது புரிந்தது. இம்பொழுது அவர்களுக்கிடையே நடைபெற்ற சம்பாஷணை மற்றவர்கள் மனதில் சந்தேகத்தைக் கிளப்பி அவன் வேறு என்ற உண்மையை அறிவித்தது. இனியும் சும்மா இருப்பார்களா! எதிர் வரிசையில் இருந்த ஒருவர் 'அம்மா நீங்க இப்படிப் பெஞ்சுக் கடைசிக்கு வந்து விடுங்கள். உங்கள் அண்ணா அடுத்தாற்போல் வந்து விடலாம். மற்றவங்க நகர்ந்து உட்கார்ந்து கொண்டால் சரியாய்ப் போய்விடும்,' என்றார்.

'எப்படியாவது சனியன் ஒழிந்தால் சரி' என்று சாந்தமடைந்தது ராமநாதனின் நல்லமனது. 'இவனுக்கென்ன வந்தது?' எனக் கனன்றது கெட்டமனது.

'ஆமாம் அப்படிச் செய்யம்மா,' என்றார் தந்தை. அப்பொழுதுதான் அவர் அறிவுக் கண் திறந்தது போலும்.

அவளுக்கு அப்படிச் செய்ய மனமில்லை, 'சே' என முணுமுணுத்த வண்ணம் அவள் எழுந்து போனாள். வண்டி அடுத்த ஸ்டேஷனிலே நின்று புறப்பட்டது. அங்குச் சிலர் ஏறினார்கள், உள்ளிருந்தவர்களின் பலமான ஆட்சேபணையையும் மீறி.

'இங்கே சௌகர்மாய் இல்லை. நான் பழைய இடத்திற்கே போறேன்,' என எழுந்து வந்துவிட்டாள் அவள்.

உணர்ச்சிக்கு அணைபோட எத்தனித்த எதிர்பெஞ்சுப் போதகர் 'பெண்கள் சௌகரியமாயிருக்குமே. அதிலே ஏற்றி இருக்கலாமே நீங்க,' எனத் தந்தைக்கு உபதேசிக்கத் தொடங்கினார்.

'இப்பொழுது என்ன குடி முழுகி போய்விட்டதாம்!' என மீண்டும் கொக்கரித்தது ராமநாதனின் கெட்டமனது.

'அடுத்த ஸ்டேஷனிலே நான் இறங்கணும். அப்பொழுது பெண்கள் வண்டியிலே ஏற்றிவிடுகிறேன்,' என்ருர் தந்தை.

'அதெல்லாம் வேண்டாம். நான் இங்கேயே இருக்கேன்,' என முறைத்துத் தந்தையை வாயடக்கினுள் அவள்.

'எனக்கும் அவளுக்கும் இஷ்டம். இதிலே உனக்கென்னடா தம்பி நஷ்டம்,' என்ற பாட்டை ஒலிபரப்பினுன் பலகைமேலிருந்து உல்லாசப் பிரயாணம் செய்யும் இருவரில் ஒருவன்.

ஆனல் அவள் ஒன்றையும் லட்சியம் செய்யவில்லை. அடுத்த ஸ்டேஷனில் இறங்கிய தந்தை மீண்டும் ஒரு முறை வேண்டினுர். அவள் மறுத்துவிட்டாள்.

பாதையில் கவிழ்ந்து கிடந்த இருளைக் கிழித்துக் கொண்டு ஓடி ஓடி முன்னேறியது ரயில்.

ஒரு ஜங்ஷன் வந்தது. வண்டியிலிருந்தோர் பெரும்பாலோர் இறங்கிவிட்டனர். எதிர் பெஞ்சில் பையனைச் சாவகாசமாகப் படுக்கச்செய்து, தானும் நீட்டி நிமிர்ந்துவிட்டார் ராமனுதன் பக்கத்தில் இருந்தவர். அண்ணன் எழுந்து சோம்பல் முறித்தான்.

'சாப்பாடு வாங்கு,' என்ருள் அழகி.

அவன் சாம்பார் சாதமும் தயிர் சாதமுமாக, இரண்டு பொட்டணங்கள் வாங்கிக் கொடுத்தான். பிறகு தான் போய்ச் சிற்றுண்டிச்சாலையில் சாப்பிட்டு விட்டு வருவதாகக் கூறினுன்.

'தண்ணீர் வேண்டுமே,' என்றாள் அவள்.

'நான் வாங்கி வருகிறேன்,' எனக் கூறிப்போனான் அவன்.

'நீங்கள் சாப்பிடுகிறீர்களா?' என்று ராமனதனிடம் கேட்டாள் அவள்

'வேண்டாம்,' என மறுத்துவிட்டான் அவன்.

அவள் சாப்பிடத் துவக்கினாள். 'சே! ரொம்பமோசம். நன்றாகவே இல்லை!' என்ற சொற்கள் சாதத்தைப் பற்றிய விமர்சனமாக அவள் வாயிலிருந்து உதிர்ந்தன.

உண்மையிலேயே அப்படித்தானா அன்றித் தான் சாப்பிடாததாலா என எண்ணினான் ராமநாதன்.

சாப்பாடு முடிந்தது. அண்ணன் வரக்காணோமே கைகழுவத் தண்ணீர் வேண்டுமே எனச் சடைத்துக் கொண்டாள் அவள்.

கீழிறங்கிப் போய்க் குழாயில் கழுவிவிட்டு வருமாறு யோசனை சொன்னான் ராமநாதன். அவள் இறங்கிப்போக விரும்பவில்லை பக்கத்து 'ஸீட்'களில் இருந்த ஓரிருவர் கக்கூஸில் தண்ணீர் இருக்கும் என நினைவு படுத்தினர். அவர்கள் குரல் கேலியாக ஒலித்தது.

'ஆமாம் கையை முதலில் கழுவிவிட்டால் குடிக்க அண்ணன் தண்ணீர் கொண்டுவந்து விடுவான்,' என்று சொல்லி அவள் எழுந்து போனாள்.

போனவள் உள்ளே 'குழாயைத் திறக்க முடியவில்லையே!' என்றாள்.

'ஏன் ஸார், நீங்கள் போய் உதவி செய்வது தானே!' என்றான் உல்லாஸப் பிரயாணி ராமநாதனிடம்.

அவள் வெளியே வந்தாள், 'ஸார் பம்பைத் திறக்க முடியவில்லே,' என்ருள் ராமநாதனைப்பார்த்து.

அவள் குரலும் பார்வையும் அவனை உதவிக்கு அழைக்கும் தோரணையில் விளங்கின.

ராமநாதன் மௌனமாக இருந்தான்.

'தண்ணீர் கிடைக்கலேயே!' என்று சொன்ன படியே வந்து சேர்ந்தான் அண்ணன்.

உண்மையாகவே 'பைப்'பை அவளால் திறக்க முடியவில்லையா, அல்லது அவள் நாடகம் ஆடுகிருளா என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த ராமநாதன் அவள் மேலும் என்ன செய்யப்போகிருள் என்பதை ஆவலுடன் கவனித்தான்.

'சரி கை கழுவணும் பைப் திறக்க முடியவில்லே. நீ வா,' என்று சொல்லி முன்னே போனுள் அவள். அந்த அதிசய அண்ணனும் பின் தொடர்ந்தான்.

மெய்யோ, பொய்யோ மிகவும் திறம்பட நடிக்கிருள் என உணர்ந்தான் ராமநாதன்.

கை கழுவு படலம் முடிந்தது. தாகத்திற்காகக் கலர் வாங்கிக் கொடுத்தான் அண்ணன். அவள் அவளிடத்தில் வந்து அமர்ந்தாள். அண்ணன் பழையபடி ராமநாதனுக்கு அடுத்தாற்போல் அமர்ந்தான்.

'கதம்பம்! கதம்பம்!'

அந் நடுச் சாம வேளேயிலும் தன் வியாபாரத்தையே நோக்காகக் கொண்ட பூக்காரன் குரல் கொடுத்து உலவினுன்.

'அண்ணு கதம்பம்!'

'எதற்கு? தலேயிலேதான் பூ இருக்கே!'

'வேணும், வாங்கு!'

அவள் பிடிவாதம் பிடித்தாள். அண்ணன், 'என்ன ஸார்?' என்று ராமநாதனிடம் ஆலோசனைக்கு வந்தான்.

'வாங்கிக் கொடுங்களேன்,' என்ற ராமநாதன் அடுத்த நிமிஷம்தான் ஏன் அவ்விதம் சிபாரிசு செய்தான் என்ற சிந்தனையிலீடுபட்டான்.

'நீங்களும் அவள் கூடத்தான் சேர்ந்துகொண்டீர் களா?' என்று சொல்லிச் சிரித்தபடியே இரண்டணாவுக்குக் கதம்பம் வாங்கினான் அவன். வாங்கி அவள் கையில் கொடுத்துவிட்டு, 'ஸார்' உங்கள் 'பேக்'கைக் கொஞ்சம் கொடுங்கள். நான் இப்படிப் படுத்துக்கொள்கிறேன்,' எனக்கூறி, ராமநாதன் காலடியில் இருந்த பையை எடுத்துத் தலைக்கு வைத்துக்கொண்டு படுத்துவிட்டான்.

'கதம்பத்தை இப்பொழுதே தலையில் வைத்துக்கொள் வதா? பிறகு வைக்கிறதா?' எனக்கேட்டாள் அவள் ராம நாதனிடம்.

'அது உங்கள் இஷ்டத்தைப் பொறுத்தது,' என்றான் அவன்.

'அது தானிருக்கே! கேட்டால் சொல்லுங்களேன்!'

என்னத்தைச் சொல்வது? ராமநாதன் மௌன மாகவே இருந்தான்.

அவள் குழலுக்குப் பாரமாக இருந்த மல்லிகை இன் னும் வாடவில்லை. மணங்குன்றவில்லை. அந்நிலையில் அவள் ஏன் இன்னும் பூ வாங்கினாள்,' வாங்கியவள் வைத்துக் கொள்ளாமல் அவனைக் கேட்பானேன்? ஒன்றும் புரிய வில்லை அவனுக்கு.

'காலை எழரை மணிக்குள் வாடிப்போகாது? என்ருள் மீண்டும்.

'வாடி விடலாம்.'

'எனவே இப்பவே தலையில் வைத்துக் கொள்ளலாம் என்கிறீர்!'

கேள்வியின் அமைப்பு முறையை மாற்றியோ, அன்றி சுற்றிவளைத்துப் பேசியோ தான் விரும்பும் பதிலைப் பெறக் குறுக்கு விசாரணை நடத்தும் வக்கீல் முயல்வதைப்போல அவள் சாமார்த்தியமாகக் கேள்வி எறிவதை எண்ணி வியந்தான் ராமனுதன். 'பூச் சூடிக்கொள்வது உங்கள் இஷ்டத்தைப் பொறுத்தது. நான் ஏற்கனவே சொல்லி விட்டேனே' எனத் திரும்பவும் பதிலளித்தான்.

அவள் முகத்திலே க்ஷணநேரம் வருத்தத்தின் சாயல். எதிர்பார்த்த விதத்தில் உற்சாகமாகப் பதில் வராததின் விளைவோ என்னவோ!

'வாடிப்போய்விடும் என்கிறீர்கள். எனவே இப்பொழுதே சூடிக்கொள்கிறேன்,' என்று கூறித் தலையிலி ருந்த பூக் கொத்தை எடுத்துக் கூடையில் வைத்துவிட்டுக் கதம்பத்தை அணிந்து கொண்டாள்.

'இனி வண்டி மூன்று நான்கு ஸ்டேஷன் தாண்டித் தான் நிற்கும். வேகமாகப் போகும்,' எனப் பேசிக் கொண்டனர் பிரயாணிகள் சிலர்.

'சரி. அப்பொழுது நான் கொஞ்சம் படுத்துக்கொள் கிறேன்,' என்று சொல்லி அவள் முடக்கிக் கொண்டு படுத்தாள். பெஞ்சின் ஒரு புறத்தில் ஏற்கனவே படுத் திருக்கும் அண்ணன். மறுபக்கம் அவள் படுத்துவிட் டாள். மத்தியில் இருந்த ராமநாதன் குறுக்கி உட்கார

வேண்டி வந்தது. . காலை மடித்து ஜன்னலில் முட்டுக் கொடுத்துப் படுத்த அவள் தலை அவன் மடிக்கு வந்துவிடும் போலிருந்தது. எனவே துணிப் பையை எடுத்து இடையில் அணை அமைத்தான் ராமனாதன். அவள் அதில் சௌகரியமாகத் தலையை வைத்துக்கொண்டாள்.

'அடி அம்மா! தூக்கம் கண்ணைச் சுழட்டுது! அடுத்த இடத்தில் வண்டி நின்றவுடன் எழுப்புகிறீர்களா? அங்கு எங்க அண்ணா ஒருவர் இருக்கிறார். அவரைப் பார்க்க வேண்டும்,' என்றாள் அவள். பிறகு கண்களை மூடிக் கொண்டாள்.

வெளியில் நிலவிய கும்மிருட்டைப் பிளந்து கொண்டு ரயில்வண்டி சென்றது. உள்ளே மங்கல் விளக்கு சிறிது ஒளிவீசிக்கொண்டிருந்தது. பிரயாண அலுப்பாலும், அசத்தும் தூக்கத்தாலும் ஆடி விழுந்து கொண்டிருந்தனர் பிரயாணிகள். அநேகர் சுகமாகத் தூங்கிக்கொண்டிருந்தனர். அண்ணன் ஆனந்த நித்திரையில் லயித்திருந்தான். உல்லாசப் பிரயாணிகள் கூட 'சாமான்களுக்கு மட்டும்' என்ற பலகையின்மேல் நித்திராதேவியின் தழுவலில் மயங்கிக் கிடந்தனர். ராமநாதன் அவளைப் பார்த்தான். வெளிறிய நிற ஆடையில் மிளிர்ந்த அவள் அழகு அங்கங்களுக்கு அணி செய்வதாய் அமைந்திருந்த பிம்பமுகத்திலே கரிய புருவங்களுக்கடியில் நீண்ட கயல் மீன்களைப்போன்ற கண்கள் மூடிக்கிடந்தன. அப்படியே குனிந்து அப்பவள அதரங்களில் முத்திடலாமா என்ற சபலம் எழுந்தது ராமநாதனுக்கு. அவள் கண் விழித்துவிட்டாள். அவன் அவளையே கவனிப்பதைக் கண்டதும் 'குப்'பென்று முகத்திலே சிவப்பேறியது. உதடுகளிலே மென்னகை அரும்பியது.

'ஸ்டேஷன் வந்துவிட்டதா?' என்றாள்.

'இல்லை' எனப் பதிலளித்தான் அவன்.

பிறகு ஸ்டேஷன் வரும்வரை அவள் கண் மூடவில்லை. அவள் தூங்குகிருளா விழித்திருக்கிருளா என அவன் பார்க்கும் பொழுதெல்லாம் அவள் கண்கள் அவன் கண்களைச் சந்தித்தன.

கடைசியாக நிற்கும் இடம் வந்தது. அவள் எழுந்து அமர்ந்தாள்.

'யாரையோ பார்க்கவேண்டும் என்றீர்களே' ராமநாதன் நினைவுபடுத்தினுன்.

'ஓ மறந்து விட்டேன்!' என்றுள் அவள்.

மறுகணம் அவளது கருநாகச் சடையும் முதுகும் மட்டும் மங்கல் ஒளியிலே அழகுசிதற, முகத்தை மட்டும் வெளியே நீட்டி பிளாட்பாரத்தைக் கண்களால் துழாவினுள். 'காணவில்லை' என்று தலையை மீண்டும் உள்ளுக்கு இழுத்து உதட்டைப் பிதுக்கியபடியே இடத்தில் அமர்ந்தாள்.

வண்டி புறப்பட்டது. அதன்பிறகு அவள் பேசவே இல்லை வண்டி அடுத்த ஜங்ஷனை நெருங்கவும் அவள் அண்ணனை எழுப்பினுள். அவனும் கண்களைக் கசக்கிய படியே எழுந்தான். ஸ்டேஷன் சமீபித்து விட்டது என்றும், சாமான்களை எல்லாம் சரி செய்யும்படியும் தூண்டினுள். அவன் சாமான்களை எடுத்துத் தயாராக வைத்தான்.

ராமநாதனும் தன் பைகளை எடுத்துவைத்துக்கொண்டான். 'ஸார் வீணையையும் கண்ணுடிச் சாமான் கூடையையும் கீழிறங்கினதும், ஜன்னல் வழியாக வாங்கிக் கீழேவைத்து விடுங்கள்,' என்றுள்.

ஸ்டேஷன் வந்ததும் ராமனுதன் இறங்கினுன். 'ஸார். இதை வாங்கி அப்படி வைத்துவிடுங்கள்!' என்றுள்.

வீணையை முதலில் எடுத்துக்கொடுத்தாள். அவள் விரல்கள் அவன் விரல்களை ஸ்பரிசித்தன. பிறகு பையைக் கொடுத்துவிட்டு ஒரு சாமானை எடுத்துக் கொண்டு கீழே இறங்கினுள்.

'வந்தனம்' என்ருள்.

ராமநாதன் நகர்ந்தான்.

'கொஞ்சம் இருங்கள்.'

அவள் அழைப்பைக் கேட்டு அவன் நின்ருன். போர்ட்டரிடம் சாமான்களை ஒப்படைத்துவிட்டு அண்ணனும் கிழிறங்கி வந்தான்.

'அண்ணு. மருந்து வாங்க வேண்டாம? நீ சாமான்களைப் பார்த்துக்கொண்டு இரு. நான் இவர்கூடப்போய் வாங்கிக்கொண்டு வந்துவிடுகிறேன்,' என்ருள்.

'நீங்கள் இங்கிருந்தால் அவர் போய் வாங்கிவந்துவிடுவார்,' என்ருன் ராமனுதன்.

'இவ்வளவு சாமான்களையும் பார்த்துக்கொண்டு தனியாக என்னுல் இருக்கமுடியாது,' என்ருள் அவள்.

அவளது பதில் ராமநாதனுக்குச் சிரிப்பாக இருந்தது. ஸ்டேஷனில் தனியாக இருக்கப் பயந்த அவள் அவனுடன் வெளியே அந்நேரத்தில் தனியே வரத் தயாராக இருந்ததை நினைத்துப் பார்த்தான். அவள் பயங்கரமானவள் என உணர்ந்தான்.

'இந்நேரத்தில் கடை திறந்திருக்காது' என்ருன்.

'திறந்திருக்கும். இரவு பகல் எந்நேரமும்,' என்ருள் அவள்.

'காலையில் ஏழே முக்கால் மணிக்குத்தானே வண்டி. காலையிலேயே போய் வாங்கிக் கொள்ளுங்கள்,' எனக் கூறிவிட்டுப் பதிலை எதிர்பாராமலே நகர்ந்தான் அவன்.

தன் மனக்கிளர்ச்சிக்குக் காரணம் தனது மனம் பக்குவம் அடையாதது எனக் கொள்ளலாம்; அவள் மனக் கிளர்ச்சிக்குக் காரணம் அவள் தாம்பத்யவாழ்விலே அவளுக்குள்ள மனக்குறையாயிருக்குமோ என எண்ணிய படியே நடந்தான் ராமநாதன்.


## தயாராகிறது!

வெள்ளையனை அழைக்கவா?
வேதியனை ஒழிக்கவா?
கடவுளையும் காங்கிரசையும்
கருவறுக்கவா?

**உண்மை என்ன?**

இதனைத் தெளிவாக விளக்குகிறது.

# திராவிடர்கழகம் ஏன்?

ஏ. வி. பி. ஆசைத்தம்பி எழுதியது

விவரங்களுக்கு

## தீச்சுடர் நிலையம்.

சிறுகனூர் P. O.
திருவானைக்கோயில் வழி, திருச்சி மாவட்டம்.

## நம்மிடம் கிடைக்கும் நூல்கள்.

| | |
|---|---|
| இந்துமத ஆசார ஆபாச தரிசினி | 2—8—0 |
| நல்ல தீர்ப்பு | 1—8—0 |
| என் கண்ணீர் | 1—8—0 |
| அன்பழகன் ஆட்சி | 1—4—0 |
| சூருவளி | 1—0—0 |
| கார்ல் மார்க்ஸ் | 1—0—0 |
| விடியுமா? | 1—0—0 |
| கதம்பம் | 0—8—0 |
| கழுதை ஊர்வலம் | 0—8—0 |
| சங்கிலிச்சாமி | 0—8—0 |
| சாவோலை | 0—8—0 |
| பதில் கூறுங்கள் | 0—8—0 |
| பாட்டாளி | 0—8—0 |
| அழியட்டுமே திராவிடம் | 0—8—0 |
| இரண்டு கதைகள் | 0—8—0 |
| புரட்சித்தீயில் | 0—8—0 |
| நாசகார சமூகம் | 0—8—0 |
| இன்ப நாட்கள் | 0—6—0 |
| ராதை சிரித்தாள் | 0—6—0 |
| இன்பத் திராவிடம் | 0—4—0 |
| சினிமாவில் கடவுள்கள் | 0—4—0 |
| புரட்சி இலக்கியம் | 0—3—0 |
| காலேஜ் காதல் | 0—3—0 |
| காந்தியார் சாந்தியடைய | 0—2—0 |

ஏஜண்டு கமிஷன் 25/- செலவு இனம்.

தனிப்பிரதி வேண்டுவோர் தபால் செலவுக்கும் சேர்த்து ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

தேவைக்கு எழுதுங்கள்

**எரிமலைப் பதிப்பகம்**

**துறையூர், ... திருச்சி Dt.**

PRINTED AT THE SRI NATARAJA PRESS, TURAIYUR.